4058

# செந்தமிழ்

தொகுதி - 75 செப்டம்பர் 1981 பகுதி - 3

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

## தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர்: டி. பி. எம். பெரியசுவாமி

# செந்தமிழ்

தொகுதி - 75 செப்டம்பர் 1981 பகுதி -

## உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நச்சினார்க்கினியரின் உரைநுட்பம் — வித்துவான் மகா வேங்கடராமன், M.A. | ... 327 |
| 2. | வட சொல்லாராய்ச்சி — கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | ... 330 |
| 3. | மொழிபெயர்ப்பில் இடர்ப்பாடு | ... 332 |
| 4. | மதுரை சுல்தானியர் வரலாறு - புலவர். S.M. காதர், B.A., B.Ed., | ... 333 |
| 5. | இயற்கை இல்லம் — கவிஞர். இல. வாசுகிநாதன் | ... 340 |
| 6. | இலக்கியத்தில் இமயமலை — கு. சதாசிவன், M.A., M.Phil., | ... 341 |
| 7. | வெளவாலும் ராடாரும் — திரையன் | ... 349 |
| 8. | விடைகாண இயலாத விந்தை | ... 355 |
| 9. | தமிழில் ஷேக்ஸ்பியர் — பழனி அரங்கசாமி | ... 357 |
| 10. | வாழ்த்துரை | ... 363 |
| 11. | படகுப் பயணம் — பழனி அரங்கசாமி | .. 364 |
| 12. | மதிப்புரை | ... 366 |
| 13. | சங்கச் செய்திகள் | ... 367 |

# நச்சினார்க்கினியரின் உரை நுட்பம்

[வித்துவான் மகா. வேங்கட ராமன் M.A.
தேசியக்கல்லூரி— திருச்சி

எவன் பண்டைப் பனுவல் பல இறவாது நிலவ உரை எழுதி யீந்தோன்? எவன் பரம உபகாரி? அவனே நச்சினார்க்கினியன் என்னும் பேராளன் என அறிமுகம் செய்கிறது ஒரு தமிழ்ப்பாட்டு உச்சிமேற் புலவர்கொள் நச்சர்பெருமான் தொல்காப்பியம், சிந்தாமணி போன்ற பண்டைப் பனுவல்கள் பலவற்றிற்கு உரையெழுதிப் புகழ் கொண்டதோடு நில்லாது சங்கச் சான்றோர் பலரைச் சாகாது காத்த புகழுக்கும் உரியவர் ஆகிறார்.

தொல்காப்பியத்திற்கும் பத்துப்பாட்டிற்கும் கலித்தொகைக்கும் உரை கண்டு உயர்ந்த நச்சினார்க்கினியர் குறுந்தொகையின் இருபது பாடல்கட்கும் உரை எழுதியுள்ளார். மேலும் திருத்தகு மாமுனிசெய் சிந்தாமணிக்கு அப்புலவர் பெருமான் எழுதியுள்ள விருத்தி, அவரது நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்றாகும் தொட்ட தொட்ட இடமெல்லாம் அவரது உரை நுட்பம் விளங்கும் அந்நூலுள் ஒரு பாடல் அவரது சோதிட நூற்புலமைக்குச் சான்றாகிறது. இலக்கிய இலக்கணமேயன்றிப் பல்கலையும் கற்றுத் தெளிந்தோனே சிறந்த உரையாசிரியனாகத் திகழ முடியும் என்பதற்கும் இதுவே சான்று எனலாம்.

வேத வணிகன் சீதத்தன். அவன் மகன் காந்தருவ தத்தை. மையல் மதயானை நிகர் மன்னர் மகிழ்தற்குக் காரணமாய மொய்கொள் முலை கொண்ட பேரழகியவள். அவட்கு வதுவை அயரும் விருப்புடைய சீதத்தன் மன்னன் கட்டியங்காரனின் ஆணை பெற்று இசைப்போட்டி நிகழ்தற்கேற்ற விண்ணைத் தொட்டிடும் மாட்சிய தோர் மண்டபம் சமைக்கத் திட்டமிட்டான். மண்டபம் அமைத்தற்கேற்ற நன்னாளைக் கணி குறிப்பிட்டான்.

நானக்கிடங் காடைநகர் நாகத்திடை நன்பொன்
வானக்கிடு மாட்சியதொர் மண்டபஞ்செய் கென்ன
மீனத்திடை நாள் கிழமை வெள்ளி, சயை பக்கம்
கானத்திடை வேங்கையெழக் கண்ணினர்கள் அன்றே

என்பது கணியின் கூற்று.

பாடலின் பின்னிரு அடிகள் தேவரின் சோதிடப் புலமைக்குச் சான்றாகும், எனினும் மெச்சுபுலமை நச்சரின் உரையின்றேல் இவ்வடிகட்குப் பொருள் காண்பது அரிது,

'கணிகள், வெள்ளிக் கிழமையும் திருதியையும் பெற்ற உத்திரட்டாதி நாள் சிங்கம் உதயமாக முகூர்த்தம் குறித்தாரென்க' என்பது இவ்வடிகட்கு நச்சரின் உரை.

மீனத்திடை நாள் என்றதற்கு நச்சர் உத்திரட்டாதி எனப் பொருள் கொண்டார். இருபத்தேழு நட்சத்திரங்களையும் முறையே மேடம் முதலாய பன்னிரு இராசிகட்கும் சமமாகப் பங்கிடுங்கால், பூரட்டாதியின் இறுதிக் காற்பகுதியும் உத்திரட்டாதியும் இரேவதியும் மீனராசிக்கு உரியவாம். எனவே மீனத்திடை நாள் என்பதற்குப் பூரட்டாதிக்கும் இரேவதிக்கும் இடைநின்ற உத்திரட்டாதி எனப் பொருள் கூறினார்.

கிழமை வெள்ளி என்பது வெளிப்படை.

மண்டபம் சமைத்தற்குரிய நன்னாளைக் குறித்த கணிகள் முதலில் இராசி கூறி அதனால் நட்சத்திரத்தை உணரவைத்துப் பின் கிழமையுங் கூறினர். பின்னர் திதி கூறத் துணிந்த அவர்கள், சயை பக்கம் என்றனர். ஜயாபட்சம் என்ற வடமொழித் தொடரின் திரிபு இது. பிரதமை முதலாக உவா நாளிறுதியாகத் திதிகள் பதினைந்து.

சோதிட நூற்புலவர் இத்திதிகளை மும்மூன்றாகப் பிரிப்பர். 1—6—11 எனவரும் திதிகளை அதாவது பிரதமை, சஷ்டி, ஏகாதசி திதிகளை நந்தா என்பர். இவ்வாறே துவிதியை, சப்தமி, துவாதசிகளைப் (2—7—12) பத்ரா என்றும், திருதியை அஷ்டமி, திரயோதசி திதிகளை (3—8—13) ஜயா என்றும், சதுர்த்தி, நவமி, சதுர்தசியை (4—9—14) ரிக்தா என்றும், பஞ்சமி, தசமி, அமாவாசை அல்லது பௌர்ணமியைப் (5—10—15) பூர்ணா என்றும் குறிப்பர்.

எனவே திருதியை, அட்டமி, திரயோதசி திதிகளை ஜயாத் திதிகள் என்பது மரபாயிற்று. இம்மூன்று திதிகளுள் திருதியையே சிறந்ததாகலின் நச்சர் திருதியையே சுட்டினார். மூன்றாகப்

பிரிக்கப்பட்டுள்ள சயை பக்கத்துள் சிறந்த ஒரு பகுதியாகிய திருதியை எனப்பொருள் காட்டினார் எனலாம்.

திருதியை, அட்டமி, திரயோதசி என்னும் முத்திதிகளுள் திருதியைத் திதியே ஈண்டுக் கொளற்பாற்று. என்னையெனில் இம்மூன்றனுள் சிறந்தது, திருதியையே யாகலான் என்றும், மேலும், ஐயா எனப் பேசப்படுகின்ற மூன்றின் இடைக்கண்ணதாகிய அட்டமிக்குத் திருதியையும் திரயோதசியும் சிறைக்கண்ணதாகலின் பக்கமென்றார் என்றும், இவற்றுள்ளும் திருதியையே சிறந்ததாகலின் ஈண்டு அதனையே கொள்க என்றும விளக்கவுரை தருவார் அவர்.

இனிக் 'கானத்திடை வேங்கை எழ என்ற தொடருக்கு மேடத்திரிகோணத்தின் நடுக் கூறாகிய சிம்மத்தே பிரகஸ்பதி தோன்றும் நேரம் எனக் குறிப்பிட்டு அதனையே இலக்கினமாகக் கூறினார் என்க.

ஒன்பான் கோள்கட்குரிய ஒன்பது வீடுகளிலும் 1—5—9 ஆக நிற்கும் மேடம், சிம்மம், தனுசு என்னும் மூன்று வீடுகளையும் மேடத்திரிகோணம் என்பர் சோதிடர். குருவிற்குப் பகை வீடாய மேடராசி ஒழிந்த எனைய சிம்ம, தனுர்ராசி நட்பு ஆட்சி வீடாகலின் நட்பிடமாய சிம்மலக்கினத்தில் வியாழன் தோன்றும் நேரமே இலக்கினமெனக் குறித்தனர் என்க. பிரகஸ்பதி, குரு, வியாழன் என அழைக்கப் பெறும் சுரகுரு நல்லன் ஆதலாலும், அவன் நற்செயல்கட்குத் துணை நிற்பவன் ஆதலாலும், அவன் தோன்றிநிற்கும் சிம்மலக்கினமே மேடத்திரிகோணத்துள் சிறந்ததென ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருதினாரென உணரலாம்.

இவ்வினை நிகழ்ந்த மாதம் பங்குனி என்பது காந்தருவ தத்தையாரிலம்பக முதற்கவியால் உணரலாம்.

விடையும் விளக்கமும் அறியமுடியாத விந்தைக் கவிகட்கு விருத்தி தந்து, தன் நுண்மாண் நுழைபுலத்தை வியத்தகு முறையில் வெளிப்படுத்திய உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்க்குத் தமிழ் கூறும் நல்லுலகம் மிகமிக நன்றிக் கடப்பாடுடையது.

# வட சொல்லாராய்ச்சி

— கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.
நாகர்கோவில்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இந்துப்பு என்பது, ஒரு வடசொல்லின் திரிபென்ப. இந்துப்பு எனல் வேண்டுமெனில், வடமொழி முதல் ஸகாரம் உயிராகத் தமிழில் திரிவதியல்பு என்க. இதனை இந்துப்பை என்று வடமொழி மருத்துவ நூல்கள் கூறும். சிந்துவின் தொடர்புடையது (சிந்து சம்பந்தி) என்பது இதன் பொருள்.

இபம் என்பது இம்பா என்னும் யானை உரப்பும் சொல்லின் திரிபெனக் கொண்டு தமிழென்பாருமுளர். இபமென்பது, பண்டை நூல்களில் அருவழக்கிற்று. தமிழ்ப்பேச்சு வழக்கிலும் இல்லை. இதை வடசொல்லென்பது, வழுவின்று.

இலாமிச்சு என்ற வடசொல் திரிபு விலாச்சம் எனத் தமிழ் மருத்துவ நூல்களில் காணப்படுகிறது. ஈட்டி என்பது ரிஷ்டி என்னும் வடசொல்லின் திரிபு. இச்சொல் வடமொழி-பாரதத்திலும் பிறநூல்களிலும் பெருவழக்கிற்று.

உல்கு என்பது ஒருவடசொல்லின் திரிபு. உல்கு = சுங்கம். உல்கு பொருள் (குறள்). சுங்கம் என்பதும், சுல்கம் என்னும் வடசொல்லின் திரிபே. எருக்கு என்பது வடசொல் தொடர்புடையது. நச்சு நீர்மை உடையதாகலான், எருக்குதல் பற்றி எருக்கு ஆயிற்று எனத் தமிழ் எனலுமாம்.

**ஏரம்பன்** என்பது ஹேரம்ப என்னும் வடசொல்லின் திரிபு. ஏரம்பன் = முன்னோன் என்னும் பொருளில் கணபதியைக் குறிக்கும். ஐப்பசி என்பது, ஐ அற்பசி (அபபிசி) என்னும் வடசொல்லின் திரிபுகள் சிதைவுகள். இதனை ஐப்பசி என்றும் வழங்குக.

கரம் என்பது கர என்னும் வடசொல்லின் திரிபு கை என்பது கரமாயிற்று என்பது வரம்பிறந்த கூற்றாகத் தோன்றுகிறது. கரணை (கரணத்தான்) என்பது கரண என்னும் வடசொல் திரிபென்ப. கரணத்தான் எழுத்தாளன். காரணிகன் என்னும் சொல், சொல் ஆராய்ச்சியாளன் (பரிசோதகன்) என்னும் பொருளில் இறை

யனார் களவியலுரையில் வருகின்றது. காரணிகன் என்பது காரணிக என்னும் வடசொல்லின் திரிபு.

**கவி** (குரங்கு) என்பது கவி என்னும் வடசொல்லின் திரிபு. கவிந்து நடப்பது கவி எனக் கொண்டு தமிழ்ச்சொல் என்பது பொருந்தாது

**கந்தன்** என்னும் பெயருக்குச் சேர்க்கப் பெற்றவன் என்பது பொருள். இப்பெயர் ஆறுமுகக் கடவுளைக் குறிக்கும். ஆறுமுகன் பார்வதியால் ஆறுதலைகளும் ஒன்றாகச் சேர்க்கப் பெற்றவன். இவ்வடசொல், கந்து சந்து என உறுப்பின் மூட்டுவாய் என்னும் பொருளில் வழங்கும். சந்திப்பது சந்தி. சந்தி சந்து ஆயிற்று எனினுமாம். ஸ்கந்த என்பதொரு வடசொல் தோளென்னும் பொருளில் வழங்கிவருகிறது கந்து என்பதன் பொருள் தூண், ஸ்கந்தம் = தூண். கந்து என்னுஞ் சொல் யானை கட்டுந்தறி என்னும் பொருளில் தமிழ் நூல்களில் பெருவழக்கிற்றாக உள்ளது தறி, வெளில் என்பன தமிழ்ப் பெயர்கள்.

**காமர்** என்பது, காமம் என்னும் வடசொல்லின் திரிபு என்ப காமரென்பது விருப்பமென்னும் பொருளிலும் அழகென்னும் பொருளிலும் தமிழில் வழங்கும். காமம் = விருப்பம். விருப்பத்தையும் விரும்புதற்குரித்து என்பதுபற்றி, அழகு எனல் இழுக்காது. காமரென்பதைத் தமிழ்ச் சொல் என்பாருமுளர்.

**கார்த்திகை** என்பது கார்த்திகா என்னும் வடசொல்லின் திரிபு. **கார்முகம்** என்னும் வடசொல் திரிபுக்கு வில் என்பது பொருள். காரவல்லி (பாகல்) என்பது காரவேல்ல என்னும் வடசொல்லின் திரிபு. காருகன் (சிற்பி, ஓவியன்) என்பது கார என்னும் வடசொல்லின் திரிபென்ப.

**குரண்டு,** குரண்டி, குறண்டி என்பன வடசொல் திரிபுகளாம். அவை தமிழ்ச் சொற்கள் என்பாருமுளர். குரண்டு = ஒரு செடி; இது தமிழ்நாட்டின்கண் பயிலும் செடியின் பெயராகலின் அது வடமொழிக்கண் சென்று திரிந்தது என்பதுமாம். குரம் என்பது குதிரைக் குளம்பு.

குணம் (கயிறு) என்பது, குண என்னும் வடசொல்லின் திரிபு. கூந்தல் என்பது, குந்தலம் என்னும் வடசொல்லின் திரிபு. கூவல் என்பது கூப என்னும் வடசொல்லின் திரிபு. கூபம் கூவம் - கூவல் என்க. இதன் பொருள் கிணறு என்பதாம்

கொஞ்சம் என்பது கிஞ்சித் என்னும் வடசொல்லின் திரிபு. இதனைக் கொச்சை என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபென்பது பொருந்தாது. கொஞ்சம் என்னும் சொல், பழந்தமிழ் நூல்களில் இல்லை.

---

## மொழிபெயர்ப்பில் இடர்ப்பாடு

இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் ஆங்கிலப் பேச்சை தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலும் கேட்பதற்கும், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பேசினால் அதனை ஆங்கிலத்தில் உடனடியாகப் பெயர்த்துச் சொல்லுதற்கும் 1951 - ஆம் ஆண்டு முதல் வசதிகள் உள்ளன. 196 - தேர்தலுக்குப்பின் சிரிமாவோ அம்மையார் பிரதமராகப் பதவி ஏற்றார். அப்போது அவரது ஆட்சியைக் குறைகூறிப் பேசிய ஒரு உறுப்பினரின் பேச்சு, மொழிபெயர்ப்பாளரின் திறமைக்கு ஒரு சவாலாக அமைந்ததோடு, அவரைப் பெருத்த சோதனைக்கும் உள்ளாக்கி விட்டது. அப் பகுதி இதுதான் ;

' சிரிமாவோ அம்மையார் ஆட்சிபீடம் ஏறிய பொழுது பலர் பலவிதமாக வரவேற்றார்கள் சிலர் கூறினார்கள் மக்களைப் பெற்ற மகராசி ஆட்சி செய்கிறார் - இனி எதுவித குறையும் இருக்காதென்று. இன்னும் சிலர் சொன்னார்கள் மங்கையர் திலகம் ஆட்சி பீடத்திலே இருக்கிறார்; அதனால் எங்களுக்கு எதுவித குறையும் ஏற்படாது என்று ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையிலே, தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையிலே, அவர் மங்கையர் திலகமாகவோ, மக்களைப் பெற்ற மகராசியாகவோ காட்சியளிக்கவில்லை; ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியாகத் தான் காட்சியளிக்கிறார்.''

— Refer Hansard, House of Representative, Ceylon 4—11—64
Vol. 58- Col. 122

# மதுரை சுல்தானியர் வரலாறு

புலவர் S. M. காதர் B. A. B. Ed.
விருதுநகர்

## 2. அலாவுதீன் உதௌஜி (கி.பி. 1338 — 40)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஜலாலுடீன் அசன்ஷாவிற்குப் பின் கி.பி. 1338 ஆம் ஆண்டு நாடாளும் ஆசையால் உந்தப்பட்ட அலாவுடீன் உதௌஜி அரியணை ஏறினான். மதுரையின் வடக்கில் வைகைக் கரையில் அடங்கி இருக்கும் காஜா சையத் சுல்தான் அலாவுதீன் என்பாரை அலாவுதீன் உதௌஜி என டாக்டர் உசேனி கருதுகின்றார். அவர்தம் கூற்றை எந்த ஆதாரத்துடனும் தெளிவுபடுத்தவில்லை. காஜா சையத் சுல்தான் அலாவுதீனும், அலாவுடீன் உதௌஜியும் காலத்தால் வேறுபட்டவர்கள் ஆவர்.

### கல்வெட்டுச் சான்று

இந்நீத்தார் நினைவிடத்தில் வைகைக் கரையில் நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ்க் கல்வெட்டு சதுர அடி ஒன்றுக்கு ஒரு தங்கம் வீதம் கோரிப்பாளையம், சிறுகனூர், சொக்கிகுளம், பீபிகுளம், திருப்பாலை, கண்ணனேந்தல், செருகோயில்பட்டி, நாகனாபுரம், பூணாறி என்னும் ஒன்பது கிராமங்கள் கூன்பாண்டியன் வசம் வாங்கப்பட்டன என்று தெரிவிக்கிறது. சாலிவாகன சகாப்தம் பவ (1495) ஆண்டு தைத்திங்கள் 11 ஆம் நாள், இராஜா விஸ்வநாத நாயக்கர், கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர் ஆகியோர் இவ்விற்பனைக்கு ஒப்பமளித்துள்ளனர்.

### விற்பனை உறுதி செய்யப்பட்டது.

நாயக்க மன்னர்களால் நிறுவப்பட்ட இக்கல்வெட்டு கிறித்தவ ஆண்டு 1573-க்குச் சமமான சாலிவாகன சகாப்தம் பவ 1495 ஆம் ஆண்டிற்குரியது. இதற்குப்பின் கி.பி 1703 இல் நவாப் நிஜாமுல் முல்க் என்பானாலும் ஆங்கிலேயர் ஆட்சியில் கி.பி. 1815 இல் ஹார்டிஸ் கோமகனாலும் இவ்விற்பனை உறுதி செய்யப்பட்டிருக்கிறது. எனவே பெயர் ஒற்றுமை ஒன்றை வைத்துக்கொண்டு டாக்டர் உசேனி தவறாக முடிவு செய்துள்ளார் எனலாம்.

நாணயம்

கி.பி. 1339 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட நாணயங்கள் அலாவுடீன் உதௌஜி, குதுபுடீன் பிரோஸ் ஷா ஆகிய இருவர் பெயரில் கிடைக்கின்றன.

அலாவுடீன் உதௌஜி வெளியிட்ட நாணயத்தில் ஒருபுறம் அலாவுத் துனியாவுத்தீன் என்றும், மறுபுறம் நடுவில் உதௌஜிஷா வென்றும், அதனைச் சுற்றிலும் எண்ணால் ஹிஜிரியாண்டு 740 உம் பொறிக்கப் பட்டிருக்கிறது.

வாழ்க்கைக் குறிப்பு

உதௌஜி சிறந்த போர் வீரன். தன் ஓராண்டுக் கால ஆட்சிக்குப்பின் மாற்றார்மேல் படைநடத்தி அந்நாட்டின் செல்வங்களை எல்லாம் கவர்ந்து வந்தான் என இபின்பதூதா இவனுடைய பொருளாசையைக் குறிப்பிடுகின்றான்

அலாவுடீன் உதௌஜிக்கு ஒரேமகள் இருந்தாள் அவளைத் தன் தங்கைமகனான குதுபுடீன் என்பானுக்கு மணமுடித்துக் கொடுத்திருந்தான்.

அலாவுடீன் உதௌஜி தமிழகத்தை இரண்டு ஆண்டுகாலம் ஆட்சி செய்தான். போர்க்களத்தில் தன்தலை அங்கியை நீக்கி தண்ணீரைப் பருகும்போது பாய்ந்து வந்த அம்பால் கொல்லப் பட்டான்.

அலாவுடீன் உதௌஜியிடம் போரிட்ட மன்னன் ஒய்சளன் மூன்றாம் வல்லாள தேவன் எனப் புலவர் குழந்தை கருதுகிறார். ஆகவே உதௌஜி கி பி. 1339 ஆம் ஆண்டு மூன்றாம் வல்லாளனால் வெல்லப்பட்டான் எனலாம்

## 3. குதுபுடீன் ஃபிரோஸ்ஷா (கி.பி. 1339.)

அலாவுடீன் உதௌஜி ஒய்சளநாடு மூன்றாம் வல்லாளனால் வெல்லப் பட்டதும் உதௌஜியின் மருமகனான குதுபுடீன் பிரோஸ் ஷா அரியணை ஏறினான்.

**நாணயம்**

இவன் நாற்பது நாட்கள் மட்டும் ஆண்டதாக பதூதா கூறுகின்றான். இந்த நாற்பது நாளைய ஆட்சியில் இவன், தன் பெயரால் நாணயம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

இவனுடைய நாணயத்தில் ஹிஜிரியாண்டு 740 (கி.பி.1339) பொறிக்கப் பட்டிருக்கிறது. இந்நாணயத்தில் ஒருபுறம் குதுபுத்-துனியாவுத்தீன் என்றும் ஃபிரோஸ்ஷா 740 என்றும் காணப்படுகிறது.

குதுபுடீன் ஃபிரோஸ்ஷா அரியணை ஏறிய நாற்பதாம் நாள், ஒழுங்கீனமான அமைச்சியல் அதிகாரி ஒருவனால் வெல்லப்பட்டான்.

## 4. கியாசுடீன் (கி. பி. 1340 — 44)

குதுபுடீன் ஃபிரோஸ் ஷாவிற்குப் பின் கியாசுடீன் அரியணை ஏறினான். இவன், முதல் சுல்தான் ஜலாலுடீன் அசன் ஷாவின் மகளை மணந்தவன். டில்லி சுல்தான் முகம்மது பின் துக்ளக்கின் குதிரைப் படையில், மாலிக்முஜீர்பின் அபிராஜா என்பானின் படைப் பிரிவில் இருந்தான். அப்போது இவன் பெயர் சிராஜுதீன். மதுரையில் மகுடாபிடேகம் செய்து கொள்ளும்போது தன் பெயரை கியாசுடீன் என மாற்றிக் கொண்டான்.

**நாணயம்**

கியாசுடீன் கணக்கற்ற நாணயங்களை வெளியிட்டிருக்கிறான். அவற்றுள் காலத்தால் முந்தியது ஹிஜிரி 741 (கி. பி. 1340) ஆம் ஆண்டிற்குரியதும், பிந்தியது ஹிஜிரி 744 (கி. பி. 1344) ஆம் ஆண்டிற்குரியதும் ஆகும்

முதல் நாணயத்தில் ஒருபுறம் - மிகச் சிறந்த மன்னன் - கியாசுத் - துனியா - வுத்தீன் என்றும், மறுபுறம் நடுவில் முஹம்மத் தம்கன்ஷா என்றும், சுற்றிலும் எண்ணால் ஆண்டு 741 என்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கி. பி. 1344 ஆம் ஆண்டிற்குரிய நாணயத்தில் ஒருபுறம், கியாசுத் துனியாவுத்தீன் என்றும், அதன்கீழே எழுத்தால் 744 என்றும் காணப்படுகிறது.

## ராணுவ ஆட்சி

கியாசுடீனின் ஆட்சியை டாக்டர் உசேனி ராணுவ ஆட்சி என்கிறார். பதூதாவின் சாட்சியங்களே அவருக்கு ஆதாரமாக உள்ளன.

ஏழாண்டு நிரம்பப் பெற்ற மகனுடனும், மனைவியுடனும் பிடித்து வரப்பட்ட கிளர்ச்சியாளனின் தலை துண்டிக்கப்பட்டது. புரட்சியாளன் ஒருவன் கையும் காலும் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதந்தான்.

நாடெங்கிலுமுள்ள காடுகளை அழித்து நகரமாக்கும் பணியில் கியாசுடீன் தன் படைகளை ஈடுபடுத்தி இருந்தான். படைகளை 45 பேர் கொண்ட சிறு சிறு குழுக்களாகப் பிரித்திருந்தான். சிறைப் பிடிக்கப்பட்ட தமிழ்நாட்டவர்களும் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பணியாற்றும் வீரர்கள் தங்குதற்கு முகாம்களும் அமைக்கப்பட்டன. நாற்புறமும் அதில் வாசல் இருந்தது. வெளியே மூன்றடி உயரமுள்ள மேடையில் இரவு முழுவதும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரண்டு வீரர்கள் கண்ணயராது காவல் இருந்தனர்.

ஓரிரவு திடீரென்று கம்பும் கழியுமாக பெருங் கூட்டம் வந்து காவல் வீரர்களைத் தாக்கினர். காவல் வீரர்கள் கையில் தீவட்டியேந்தி அவ்வீரர்களை வெருட்டிப் பிடித்தனர். பலர் தப்பிவிட்டனர். அகப்பட்டோர் நான்கு குழுவாகப் பிரிக்கப்பட்டு நான்கு வாசலிலும் நிறுத்தப்பட்டனர். சிறுவர்களும் பெண்களும் அவர்களில் மிகுதியாக இருந்தனர். பெண்களின் கரங்கள் அவர்களின் தலைமுடியுடன் பிணைக்கப்பட்டது. ஒருசில மணித்துளிக்குள் காட்டு மரம் வெட்டிச் சாய்க்கப் படுவதுபோல் அவர்கள் அத்தனை பேர்களும் வெட்டித் தள்ளப்பட்டனர்.

## கொப்பத்துப் போர்

கி. பி. 1322 இல் முகம்மது பின் துக்ளக்கின் ஒன்றுவிட்ட சகோதரன் பஹாவுதீன் குர்சப் என்பானைக் காக்க காம்பிலி

நாட்டரசன் காம்பிலித் தேவன் களத்தில் உயிர் நீத்தான். அவனுடைய மனைவி மக்களும் அந்தப்புரத்து மகளிரும் எரியூட்டி மேன்மாடத்திலிருந்து அதில் வீழ்ந்து உயிர் நீத்தனர். பஹாவுதீன் குர்சப் ஒய்சளன் மூன்றாம் வல்லாளனிடம் சரணடைந்தான். ஒய்சளன் வல்லாளன், பஹாவுதீன் குர்சப்பை துக்ளக்கிடம் பிடித்துக் கொடுத்துப் பாராட்டுதலைப் பெற்றான்.

டில்லிக்கு இழுத்துச் செல்லப்பட்ட பஹாவுடீன உயிருடன் தோலுரிக்கப்பட்டான். தோலுரிக்கப்படும்போது பஹாவுதீனுக்காக நெக்குருகியவன் மாலிக் முஜீர்பின் அபிராஜாவின் குதிரைப் படை வீரன் சிராஜுதீன் ஒருவன்தான்.

கியாசுடீன் என்ற பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்ட சிராஜுதீன் ஒய்சள நாட்டு மூன்றாம் வல்லாளன் மேல் பாய்ந்தான் கொப்பத்திற்கு அருகில் இருபடைகளும் கலந்தன. 80 வயது நிரம்பிய வல்லாளன் வீராவேசத்துடன் போரிட்டான். சுல்தானின் வீரர்கள் தங்கள் தலைப்பாகையை அவிழ்த்துக் குதிரையின் பிடரியில் கட்டிவிட்டுக் களத்தில் இறங்கினர். இப்படிச் செய்வது வாழ்வா அல்லது வீழ்வா என்று காணத் துணிந்துவிட்டதற்கான அடையாளம் ஆகும்.

ஆறு திங்களுக்கு மேல் போர் நடந்தது. களத்தில் களைத்த ஒய்சள நாட்டான் தரையில் மல்லாந்து வீழ்ந்தான். கியாசுடீனின் அண்ணன்மகன் நசீருடீன் உருவிய வாளுடன் அவன்மேல் பாய்ந்தான். அப்போது அவன் அருகில் இருந்த படைவீரன், 'அவன்தான் அரசன்' என்று கூறவே அவனைக் கொல்லாமல் சிறைப் பிடித்தான்.

சுல்தான் கியாசுடீன் ஒய்சளனை மிக்க மரியாதையுடன் நடத்தினான். அவனுக்கு விடுதலை அளிப்பதாகக் கூறி ஒய்சளத்தின் செல்வங்களையும் - யானை, குதிரைகளையும் கவர்ந்து கொண்டான். எல்லாம் கவர்ந்துவிட்ட பின்னர் அவனைச் சித்திரவதை செய்தான். பின்னர் அவன் தோலை உரித்து அதில் வைக்கோல் திணித்து மதுரைக் கோட்டையில் தொங்க விட்டான்.

## போர் முறை

கொப்பத்துப் போரில் சுல்தான் ஐம்முனைத் தாக்குதலை மேற்கொண்டான். இவனுடைய படையின் வலது பிரிவிற்குத் தளபதி சபியுத்தீன் என்பானும் இடது பிரிவிற்கு மாலிக் முகமது சலாவுதீன் என்பானும் நடுவண் அமைந்த மூன்று பிரிவுகட்கும் மன்னன் கியாசுடீனும் தலைமையேற்று நடத்திச் சென்றனர்.

## துறைமுகம்

துறைமுகப் பட்டினம் அழகாகவும் ஆழமான கடற்கரைப் பகுதியிலும் அமைந்திருந்தது. நீண்ட பெரிய கண்ணாடிச் சாளரங்கள் அதில் அமைந்திருந்தன. விரோதிகளின் தாக்குதல் நிகழுமானால் தப்பித்துக் கொள்ளவும், பகைவர்கள் அகப்பட்டுக் கொள்ளவும் தக்க சூட்சுமத்துடன் அது விளங்கியது. நகரத்தில் கற்கட்டிடத்தாலான அகன்ற பெரிய மசூதி இருந்தது.

தமிழகத்தில், நாகப்பட்டினம் காவிரிப் பட்டினம், காயல் பட்டினம் என எண்ணிறந்த துறைமுகப் பட்டினங்கள் இருந்த போதிலும் இடைக்காலத்தில் பீடும் பெருமையும் கொண்டு விளங்கிய காவிரிப் பட்டினம் அல்லது நாகப்பட்டினத்தைத்தான் பதூதா குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று டாக்டர் உசேனி கருதுகிறார். ஆனால் நாகப் பட்டினத்திலோ காவிரிப் பட்டினத்திலோ கற்கட்டிடத்தால் ஆகிய மசூதி இல்லையாதலால் டாக்டர் உசேனியின் கூற்று கோடற்பாலதன்று.

காயல் பட்டினத்தில் 'பழைய ஜும்மா மசூதி என்ற பெயரில் கற்கட்டிடத்தால் அமைந்த மசூதியைக் காண்கிறோம். ஆதலால் பதூதா காயல் பட்டினத்தைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

## வாழ்க்கைக் குறிப்பு

கியாசுடீன், ஜலாலுடீன் அசன்ஷாவின் இரண்டாம் மகளை மணந்தவன். மூத்தவளை பதூதா மணந்திருந்தான். இவனுடைய மைத்துனனின் பெயர் அமீர் ஹாஜி. ஜலாலுடீன் வெல்லப்பட்டதும் அமீர் ஹாஜியை கியாசுடீன் காத்தான்.

கியாசுடீனுக்கு ஒரு மகனும் மகளும் இருந்தனர். தன் மகளை தன்னுடைய தங்கைமகனுக்கு மணமுடித்துக் கொடுத்திருந்தான். இவனுடைய அன்னையும் அண்ணன் மகனும் தங்கையும் மதுரையில் வந்தனர்.

### கொள்ளை நோய்

நாட்டை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கியாசுடீன் வடக்கே ஹர்காத் (ஆற்காடு) வரை சென்றான். அப்போது கடும் பிளேக் நோய் மதுரையில் பரவியது பெரும்பாலோர் அதற்குப் பலியாயினர். கியாசுடீன் மதுரைக்குத் திரும்பியபோது அவனுடைய அன்னையும், மனைவியும், மகனும் பிளேக் நோயால் துடித்துக் கொண்டிருந்தனர். ஒரு வியாழக்கிழமையன்று சுல்தானின் மகனும், அடுத்த வியாழக் கிழமை அவன் அன்னையும் இறந்தனர். அடுத்த 15 ஆம் நாள் சுல்தானும் அவர்களின் அடிச்சுவட்டில் மறைந்து விட்டான்.

### காலம்

கியாசுடீனின் இறுதி நாணயம் கி.பி. 1344 ஆம் ஆண்டிற் குரியதும், இவனை அடுத்து வந்த நசீருடீனின் நாணயம் கி.பி. 1345-க்கு உரியதும் ஆகலின் கி.பி. 1344-இல் கியாசுடீன் மறைந்தான் எனலாம்.

# இயற்கை இல்லம்

கவிஞர். இல. வாசுகிநாதன்

இறைவனவன் நிலமகட்குக் கட்டி வைத்த
எழில்கொஞ்சும் மாளிகைதான் மலைகள்! தண்மை
நிறைவான அருவியெல்லாம் நெடுங் கழுத்தில்
நித்திலமாய் ஒளிகூட்டும் வண்ண மாலை!
குறையாத செல்வத்தில் மிகுந்த வள்ளல்
கொடைநிகர்த்து நிழல்செய்யும் நெடுமரங்கள்!
கறைபடியாப் பறவைகளும் பிறவும் கூடிக்
கலகலப்பாய் வாழுமிடம் இயற்கை இல்லம்!

வானுயர்ந்த தோற்றத்தால்! உறுதி கொண்ட
வாய்மைமிகு சான்றோர்தம் உள்ளம் போல்
தானசையாத் தன்மையினால்! தாயகத்தை
தனிநின்று காத்துவரும் தகைமைதன்னால்
தேனுதுக்கும் மலர்முகத்தால்! மகிழ்வுகூரும்
தெளிதமிழின் தேன்மழலைச் சிறுவராகிப்
பானுவிரி கதிரொளியால் செம்பொன் மேனி
படைத்திட்ட குன்றமெல்லாம் இயற்கை இல்லம்.

மலர்க் குவளை விழிகாட்டும் மங்கை யாகி
மணிநீரில் முகங்காட்டி வரவு கூறிச்
சிலிர்க்கின்ற பனிமுத்தம் இதழிற் கூட்டிச்
சிந்தைக்கு விருந்தூட்டி! செவிக்கு மின்பம்
சலிப்பின்றி வண்டினங்கள் யாழி சைக்க
சந்தனத்துத் தமிழ் எடுத்துக் குயில்கள் பாட
ஒலிக்கின்ற அத்தனையும் நமது நெஞ்ச
ஊஞ்சலிலே தாலாட்டும் இயற்கை இல்லம்,

# இலக்கியத்தில் இமயமலை

கு. சதாசிவன் M. A, M. Phil.,
மதுரைப் பல்கலைக் கழகம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மணற்புரம் என்ற அன்றைய ஊர் இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடியில் இருந்தது. ஆனால் மணிப்பூர் என்ற இற்றைய ஊர் வடகிழக்கிந்தியாவில் அஸ்ஸாம் பகுதிக்குக் கீழும் பர்மாப் பகுதிக்கு மேலும், திரிபுராவுக்குக் கிழக்கிலும் அமைந்துள்ளது. இப்பெயர் எப்படி இங்கிருந்து அங்குச் சென்றது? பாண்டியன் வட நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, வெற்றிவாகை சூடிய காலத்துத், தன்னுடன் சென்ற தமிழரில் சிலர் இந்தியாவின் வட கிழக்குக் கோடியில் குடிபுகுந்திருக்க வேண்டும் அப்படிக் குடியேறி யவர் பாண்டிய நாட்டின் மணலூர்ப் பகுதியைச் சேர்ந்தவராயிருத்தல் வேண்டும். அப்படிக் குடியேறியோர், தாம் புதிதாகக் குடிபுகுந்த இடத்திற்குத் தங்களின் பழைய ஊர்ப் பெயரை இட்டிருக்க வேண்டும். இப்படி அவர்கள் இட்ட மணலூர் புரம் பிற்காலத்து மணிப்புரமா யிருக்க வேண்டும். இத்துடன் இம்பாலாப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ஒய். மொகீந்திரசிங் (Y. Mohendra Singh) அவர்கள் என்னிடம் சிக்கிமில் கூறிய கூற்றும் இதனையே வலியுறுத்துகிறது. எனவே மணிப்பூர் தமிழ்வழி பிறந்த ஊர்ப் பெயர் என்பதும் அங்குத் தமிழருக்குத் தொடர்பு இருந்தது என்பதும் பொருத்தமே.

இக்கருத்துக்கு வலுவூட்டுவதாய்ப் பிறிதொரு கருத்து வரலாற்றில் உள்ளது. அஃதாவது மணிப்பூரிலிருந்து ஒரு கூட்டம் தமிழகம் போந்து, வடஆர்க்காட்டுப் பகுதியில் குடியேறியது என்பதாம். இச் செய்தியை இரண்டு திருப்பரங்குன்றக் கல்லெழுத்துக்கள் அறிவிக்கின்றன. இவை செஞ்சியையாண்ட நாயக்க மன்னர்களின் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறுகின்றன. இடம் பெயர்ந்த இம்மக்கள் வடஇந்தியாவின் மணிநகரபுரத்திருந்து விஜயநகருக்கும் அங்கிருந்து வடஆர்க்காட்டு (செஞ்சி)ப் பகுதிக்கும் வந்தனர் என்றும் அறிகிறோம். சூரப்பநாயக்கரின் கல்லெழுத்துக்களில் ஒன்று அவரை 'மணிநகரபுரத்தின் தலைவன்' என்று கூறுகிறது.

இம்மக்கள் தமிழகம் வந்ததை நோக்குமிடத்து, அது அவர்களுக்குத் தமிழகத்துடன் இருந்த நெடுநாளைய உறவினைக் காட்டுகிறது என்று தோன்றுகிறது. இவர்கள் வடகீழ்ப் பகுதிகளில் குடியேறிய தமிழரின் மிகப் பிந்திய காலத்துச் சந்ததியினராய் இருத்தல் வேண்டும். வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இவர்கள் இடைக்காலத்துத் தமிழகம் வந்திருக்கலாம் இச் செய்திகளும் தமிழரின் வடநாட்டுத் தொடர்பினைச் சுட்டுவதாய் அமைகின்றன.

அடுத்து நாம் கலிங்கத்துப் பரணியில் கண்ட சில உண்மைகளை நோக்குவோம். கலிங்கத்துப் பரணி, கரிகாலன் காவிரிக்குக் கரை எடுத்த செய்தியைச் சிறப்பித்துக் கூறுகிறது. பொன்னிக்குக் கரை கட்டுங்கால் சிற்றரசரும், பிறரும் அவன்முன் பணிந்து நின்றனர். ஆனால் புகரி மட்டும் வீண் ஆரவாரத்துடன் வாராது நின்றான். அவனுடைய இச்செயல் இச்சோழனைக் கோபமூட்டுவதாய் அமைந்தது. ஆகவே கரிகாலன் அவனுடைய ஆரவாரத்திற்குரிய நெற்றிக் கண்ணை அழித்தான் அதாவது அவனை வெற்றி கொண்டான் என்பது பொருள். கலிங்கத்துப் பரணியின் அப்பாடல்.

''தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திலா புகரியைப் படத்
தெழுது கென்று கண்டிதுமி கைக்கண் என்
றிங்கழிக்கவே அங்கழிந்ததும்''

(கலிங். பரணி., 8 : 20)

'முகரியை' ஓர் இடமாகக் கொண்டு, அவ்விடம் காவிரிக்குக் கரை எடுக்குமிடத்துத் தடையாய் இருந்தது; கரிகாலன் அத்தடையை நீக்கிக் கரையெடுத்தான் என்று பிள்ளை போன்ற அறிஞர் கருதினர். ஆனால் ஆராவமுதன் என்ற அறிஞர் 'முகரியை மௌகாரி[1]

---

1 T. G. Aravamuthan, the Kaveri, the Maukharis and the Sangam Age, (Madras, 1925)

என்ற மன்னராகக் கொண்டார் இம் மௌகாரிகளோ வங்கத்தைப் படைத்தலைவராயும், சிற்றரசராயும், பேரரசராயுமிருந்தாண்டவர்கள். இவர்களில் ஒரு மன்னனைத்தான் கரிகாலன் வெற்றி கொண்டிருக்க வேண்டும் என்று அவர் அறிவிக்கிறார். பிள்ளையவர்களின் கருத்தைக் காட்டிலும் ஆராவமுதன் அவர்களின் கருத்து ஏற்புடைத்தாய்த் தோன்றுகிறது. ஏனெனில் அனைத்து மன்னரும் கரிகாலனைத் தொழுது நிற்குமிடத்து முகரி என்ற இடம் மட்டும் தொழுது நிற்கவில்லை என்றால் அது பொருத்தமுடைத்தாய்த் தோன்றவில்லை ஆனால் முகரியை ஒரு மன்னனாகக் கொண்டு கருதின் ஈண்டுப் பொருள் திண்ணமாவதைக் காணலாம்.[2]

மேலும் மௌகாரிகள் வங்கப் பகுதியையும், இராஜபுதனத்தையும் மிகப் பழங்காலந்தொட்டு ஆண்டு வந்துள்ளனர் என்பது வரலாற்றுச் செய்தி. அவர்கள் குறுநில மன்னராயும் படைத்தலைவராயுமே இருந்து வந்துள்ளனர். இவர்களுக்கும் தென்னிந்தியாவுக்கும் அரசியல் தொடர்புகள் இருந்துள்ளன. கி. பி. ஆறாம் நூற்றாண்டில், ஈசானவர்மன் என்ற பேரரசன் ஆந்திரர்களையும் சூலிகரையும், கௌடரையும் வென்றதாயும் அறிகிறோம்.[3] கிறிஸ்துவுக்கு முந்திய காலங்களில் வங்கப் பகுதியை பிரதாபசிம்கா என்ற மன்னர் ஆண்டுள்ளார். இவர் தேக்காரியப் (Dhekka.iya) பகுதியின் மன்னர் என்றும் தேகுரி (Dhekuri) பர்துவான் மாவட்டத்தில் கத்வா (Katwa)ப் பகுதிக்கு அண்டையில் உள்ளது[4] என்றும் அறியப்படுகிறது

---

2 வி. கோபாலையர் பதிப்பில் முகரி என்பவன் கரிகால் மன்னனின் ஆணைக்கிணங்கி வந்து காவிரிக்குக் கரை கட்டாமையினால் தண்டிக்கப்பட்ட மன்னன் என்றும், அவன் பெயரால் இருந்த நகரமே முகரி என்றும் கூறும். வி. கோபாலையர் தமது பழைய பதிப்பாகிய கலிங்கத்துப்பரணியில் "மண்கொண்ட பொன்னிக் கரை கட்ட வாராதான் கண்கொண்ட சென்னிக் கரிகாலன்" என்று வரும் (குலோத்துங்க சோழன் உலா) பாடற்பகுதியை மேற்கோளாகக் காட்டுகிறார். —(ஆ-ர்)

3. R. C. Majumdar and others, An Advanced History of India, (Macmillan London, 1967) pp. 147-8.
3. R. C. Majumdar..........P. 157
4. R. C. Majumdar, The History of Bengal, vol. I, (N.V. publications, Patna, 1971), p. 157

கி.பி. தொடக்க காலங்களில் வட நாட்டில் அரசியல் குழப்ப மேற்பட்ட போது, வங்கப் பகுதியை மௌகாரிகளே ஆண்டிருக்க வேண்டும்; அவர்கள் வலி குன்றியிருந்ததால் அவர்களைப் பகைவர் வெற்றி கொண்டிருக்கவும் வேண்டும் அப்படி வெற்றி கொள்ளப் பட்ட முகரி என்ற மன்னன் யார்? அவன் மௌகாரி இனத்தைச் சேர்ந்தவனா? புலியூர் கேசிகன் அம் முகரியைப் பிரதாபருத்திரன் என்று கருதுகிறார். கழகப்பதிப்பில் முகரி என்ற சொல்லுக்கு வீண் ஆரவாரமுடையவன் என்ற பொருள் காணப்படுகிறது. ஆனால் அறவாணன் முகரியை 'திருலோசனன் என்று கருதுகிறார்.

ஆகவே முகரி என்ற பெயரைப் பொறுத்த அளவில் வேறு பாடுள்ளது வெளிப்படை. பிரதாபருத்திரன் என்பது மௌகாரியைக் குறிக்குமா? அதுபோன்று திருலோசனன் யாரைக் குறிக்கும்? திரு லோசனன் என்ற பெயர் ஒரு வேளை திரிணேத்திர பல்லவனைக் குறிக்கலாம். சோழன் கரிகாலனுக்குச் சம காலத்தவனாகக் குறிக்கப் படும் பல்லவனின் பெயர் திரிநயன பல்லவன்[5] என்பதாம் இப் பெயர்கள் இரண்டாம் ஸ்கந்தவர்மனுக்குரிய பிற பெயர்களாம். இந்தப் பல்லவன் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை மண்டல மாண்டவன் என்றும் அறிகிறோம். மேலும் ஒரு தெலுங்கு சோடக் கல்லெழுத்து[6] இப் பல்லவனையும் காவிரிக்குக் கரைகட்டும் செய்தியையும் கூறுகிறது. கல்வெட்டுப் பகுதி ' திரிணேத்திர பல்லவனின் தலைமையில் வந்த அனைத்துக் குறுநில மன்னர்களையுங் கொண்டு கரிகாலன் காவிரிக்குக் கரை கண்டான்; அக்கரிகாலன் அப்பல்லவனின் மூன்றாம் கண்ணைத் தம் தாமரை போன்ற காலால் அழித்தான்'' என்பதாம்.

இக்கல்வெட்டுப் பகுதியையும் கலிங்கத்துப் பரணியையும் நோக்குமிடத்து, கரிகாலனுக்கும், பல்லவனுக்கும் காவிரிக்குக் கரை காணும் செயலைப் பொறுத்தளவில் உள்ள ஒற்றுமை விளங்கும். அப்படி இருந்தும் கலிங்கத்துப் பரணி இப்பல்லவனை முகரி என்று கூறிய மர்மம் புரியவில்லை. மேலும் கரிகாலனுக்கும் ஸ்கந்தவர்மன் என்ற பல்லவ மன்னனுக்கும் கால அளவில் உள்ள தொடர்பும்

5. See Indian Antiquary, vol. XLI, pp. 144—9
6. K A N. Sastri, op. cit., p. 58, f. n.

விளங்கவில்லை. கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டிய செய்தி ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தெலுங்கு - சோட மன்னனாகிய புண்ணிய குமாரனின் மேலாப்பாடு கல்லெழுத்தில் முதன் முதலாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே கலிங்கத்துப் பரணியும் இக்கல்லெழுத்தைத் தழுவி இச் செய்தியைப் பெற்றிருக்கலாம்.

கே. வி. சுப்பிரமண்ய அய்யர் கரிகாலனையும் திருலோசன பல்லவனாகிய இரண்டாம் ஸ்கந்தவர்மனையும் சமகாலத்தவர் என்பதற்கு மூன்று சான்றுகள் உள்ளன. முதலாவது, திருவாலங்காடு பட்டயத்தின் நாற்பத்திரண்டாம் பாட்டில் குறிக்கப்படும் கரிகாலனின் காஞ்சிமீதான வெற்றியும், அதனைப் பொன்வேய்ந்த சிறப்புமாகும். இரண்டாவது திருஞானசம்பந்தர் பாடிய திருக்கச்சி யேகம்பத்தின் ஏழாம் பாடலில்[7] வரும் குறிப்புகளுமாம். மேலும் வேலூர்ப்பாளையப் பட்டயங்களில் பல்லவர் காஞ்சியைத் திருப்பிக் கொண்ட செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் மேற்கண்ட சான்றுகளின்படி சமகாலத்தவராகிய காரணத்தால், அய்யரவர்களின் கருத்துப்படி இருவரும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்தவராகின்றனர். ஆனால் இக் கணக்கீடு சங்க இலக்கியச் சான்றுகளுக்குப் புறம்பாயுள்ளது. சங்க காலத்து இலக்கியங்களில் வரும் கரிகாலனே (திருமாவளவனே) வட நாடு மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றனன். காவிரிக்குக் கரை கண்ட கரிகாலன் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் என்றால் சங்கப் புலவர்களாகிய மாமூலனார், வெண்ணிக் குயத்தியார் கருங்குழலாதனார், கழாத்தலையார், பரணர், நக்கீரர் ஆகியோரால் பாடப்பட்ட கரிகாலன் யார்? இவனுக்கும் கலிங்கத்துப் பரணி கூறும் கரிகாலனுக்குமிடையேயுள்ள தொடர்பு யாது? இளங்கோ அடிகளால் புகழப்பட்ட பெருமைக்குரிய திருமாவளவன் (கரிகாலன் என்ற பெயரில் கலிங்கத்துப் பரணி கூறும்) வடநாடு மீது படையெடுத்து மௌகாரிகளை வெற்றி கொள்ளவில்லையா? கரிகாலனே காவிரிக்குக் கரை அமைத்தான் என்றால், அவன் உறுதியாக சங்ககாலச் சோழமன்னனாகிய கரிகாலனாகவே இருக்க வேண்டும். கலிங்கத்துப் பரணி சுட்டும் பெரு வெற்றிக்குரியவனாகக் கூறப்படும் கரிகாலன்

---

7. சம்பந்தர், தேவாரம், 148 : 7 : 2-3

"கழலின் வெவ்வார் கரிகாலனை
நண்ணு வா ரெழில் கொள் கச்சி நகரே ..."

மௌகாரிகளை வெற்றி கொள்ளாது, திருமாவளவன் என்ற சோழனே இச்சாதனையைப் புரிந்திருக்க வேண்டும். ஏனெனில் இளங்கோ அடிகள் கரிகாலனை இப்படையெடுப்புடன் இணைத்துக் கூறாது திருமாவளவனையே இணைத்துக் கூறுகிறார். கிறிஸ்து யுகத்தின் தொடக்க காலங்களில் குறுநில மன்னர்களாயிருந்த மௌகாரிகள் சற்றுப் பிந்திய நூற்றாண்டுகளில் ஹூணர்களை வென்றதாக வரலாற்றுச் செய்திகள் விளம்புகின்றன. ஆகவே திருமாவளவனால் வெற்றி கொள்ளப்பட்ட வங்கத்து மன்னன் பெரும்பாலும் குறுநில மன்னனாக இருந்த பிரதாபசிம்மனாகவே இருக்க வேண்டும். இவனே பிரதாபருத்திரன் என்று அறிப்பட்டிருக்கலாம். ஏனெனில் இவன் ஆண்ட காலத்திற்கும் இடத்திற்கும் சங்க இலக்கியங்கள் குறிப்பாக சிலப்பதிகாரம் சுட்டும் வங்கப் பகுதிக்கும் காலத்திற்கும் நெருங்கிய சமகாலத் தன்மை உள்ளது.[8]

---

8. இப்படையெடுப்புகளைத் தொடர்ந்து தமிழ்நாட்டுக் கட்டடக் கலையும் பாசனக் கலையும், சிற்பக்கலையும், சமயக் கோட்பாடுகளும் வட இந்தியாவில் குறிப்பாக காஷ்மீர் முதல் மணிப்பூர் வரை பரவியிருக்க வேண்டும் என்பதற்குரிய சான்றுகள் பல உள. கி பி. 9 ஆம் நூற்றாண்டில் ஆனந்தவர்மன் என்ற காஷ்மீர் அரசன் விதாஸ்தா நதிக்குக் கற்களால் கரைகட்டினான் என்று இராஜதரங்கிணி கூறுகிறது [Kathana. Rajatarangini, V., 92, 95, 103]. அல்மோராவுக்கு அண்மையிலுள்ள லச்சுமேஸ்வரக் கோயிலில் உள்ள சில சிற்பங்கள் 'தென்னிந்திய சமண உருவங்களை ஒத்திருக்கின்றன, என்று பன்னாலால் அறிவிக்கின்றார். (PannaLal. Account of a Tour in the Almora District. Himalayas J. B. O. R. S, vi, 361 - 94]. மேலும் பல தென்னிந்தியக் கலைத்தூண்டுதல்களுக்கு அக் கட்டுரையைக் காண்க. இவை அனைத்தும் ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. (T. G. Aravamuthan, The Kaveri, the Maukharis and the Sangam Age, Madras, 1925). ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இத்தொடர்புகள் இருந்துவந்த போதிலும் இவை அந் நூற்றாண்டுக்குப் பின்னரே வடஇந்தியரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சிலப்பதிகாரம் இமயமலை அடிவாரத்திலிருந்து முனிவர்கள் தமிழகம் வந்தனர் என்றும், இமயமலை அடிவாரத்தில் முனிவோர் பலர் இருந்தனர் என்றும்,

திருமந்திரத்தின் ஆசிரியரான திருமூலர் இமயமலைக்குச் சென்று சிவனைக்கண்டு திரும்பினார் என்றும், தமிழர்கள் வட இந்தியாவுடன் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்றும் அறிவிக்கின்றன.

இனி நாம் சங்க இலக்கியங்கள் கூறும் வங்கப் பகுதியை நிலவியல் அடிப்படையில் வரையறை செய்வோம் சோழன் வெற்றி கொண்ட நாடுகள் மூன்று. அவை (i) வச்சிர நன்னாடு, (2) மகத நன்னாடு, (3 அவந்தி. அவந்தி நன்னாடு என்பது உஜ்ஜயினியைத் தலை நகராகக் கொண்ட மாளவ நாடு ஆகும். கி. மு. ஆறாம் நூற்றாண்டையொட்டி எழுச்சியுற்ற பதினாறு மகாஜனபதங்களில் அவந்தியும் ஒன்று. தென் பீகார்ப் பகுதியில் பாட்னா, கயாப் பகுதிகளை உள்ளிட்டதே மகதம் ஆகும். பதினாறு மகாஜனபதங்களில் உன்னத இடத்தை அடைந்தநாடு மகதமே ஆகும். வச்சிரம் என்பது வடபீகார்ப் பகுதியே. இது கி. மு. ஆறாம் நூற்றாண்டுகளில் எழுந்த குடியரசு நாடுகளில் ஒன்று ஆகும். இது வஜ்ஜி அல்லது வஞ்ர என்றழைக்கப்பட்ட விரிஜ்ஜிப் பகுதியாகும். சிலப்பதிகாரத்தின் குறிப்புரையிலிருந்து பெறப்பட்ட வச்சிர நாடு ''சோணை நதியும் கங்கை நதியும் கடலொடு கலக்குமிடத்திற்கிடைப்பட்ட வங்கப் பகுதியே'' என்ற உண்மையை ஆராயின் விளங்கும். வச்சிர என்பது லாட (Lādha) அல்லது ராத (Rādha) என்றழைக்கப்படும் நாட்டின் இரு பகுதிகளில் ஒன்றாகும். அவை வஜ்ஜபூமி, சுப்புபூமி என்பனவாம். ராதப் பகுதியே வங்கத்தின் பந்துவான் என்று பானர்ஜீ கூறுகிறார். மகாபாரதத்தின் உரையாசிரியர் நீலகண்டர் சுப்ஹாவையே ராதப் பகுதியாகக் கருதுகிறார். பீர்புமுக்குக் கிழக்கிலும் தாமோதர் நதிக்கு வடக்கிலும் உள்ள நிலப்பரப்பே ராத என்று திக்விஜயபிரகாசர் என்ற நூல் அறிவிக்கின்றது.

இந்த வஞ்ர என்ற வச்சிர நன்னாட்டிலிருந்து கலிங்க மன்னனான காரவேலன் ஓர் இளவரசியை மணம் புரிந்துள்ளான் என்று அவனது ஹதிகும்பாக் (யானைக் குகை) கல்லெழுத்து கூறுகின்றது. ஆகவே காரவேலனின் காலத்தில் வச்சிர நன்னாடு வலுவுடையதாய் இருந்திருக்கிறது என்பது வெளிப்படை. 'இவர்களையே கி. பி முதலாம் நூற்றாண்டுத் தமிழர் அறிந்திருந்தனர்' என்று பேராசிரியர் கிருஷ்ணசாமி அய்யங்கார் கூறுகின்றார்கள். மேற்-

கூறப்பட்ட திருமணச் செய்தி 'தமிழ் இலக்கியத்தின்கண் காணப்படும் குறிப்புகளை வரலாற்றுத் தன்மையுடையனவாக மாற்றுவதைக் காணலாம்' என்றும் அவர் கூறுகின்றார்

மேற்கூறப்பட்ட அகப் புறச் சான்றுகளை நடுநிலையுடன் நுணுகி ஆராய்வதாயின் தமிழ் இலக்கியங்கள் கூறும் முத்தமிழ் மன்னர்களின் வடநாட்டுப் படையெடுப்பு வரலாற்றுண்மை என்பது தெள்ளிதின் விளங்கும். தத்தம் தலை மக்களைப் புகழ்தலையே தம் தொழிலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் உண்மைக்கு மாறாக எதுவும் கூறார். கடுகளவு ஆயினும் உண்மையில்லா எச்செயலையும் அவர்கள் புகழ்ந்துரைப்பதில்லை ஒரு வேளைத் தம் கற்பனைத் திறத்தை அவ்வுண்மைக்கு ஏற்றிக் கூறியிருக்கலாமே தவிர, உள்ள உண்மையைத் திரித்தோ, மறைத்தோ, மறுத்தோ கூறவேண்டிய தேவையும் அன்று ஏற்பட்டதில்லை. வட நாடுகளின் குறிப்பிட்ட நில அமைப்புகளையும், அவற்றையாண்ட மன்னர்களின் பெயர்களையும் கற்பனையிலிருந்து பெற்றிருந்தால் அவை இன்று பொய்யாயிருக்குமே! மாறாக அவர்கள் அன்று குறித்துச் சென்ற வரலாற்றுண்மைகள் இந்திய வரலாற்றைக் குறிப்பாகத் தமிழரின் வரலாற்றை வரையப் பேருதவியாய் இருப்பதைத் தமிழ் வரலாற்றாளர் அறிவர்

— (தொடரும்)

# வௌவாலும் ராடாரும்

— திரையன்

பறக்கும் திறமையுள்ள வௌவால்கள் பறவையினத்தைச் சேர்ந்தவையா? இல்லை. பறவைகளைப்போல இருந்தாலும், அவை பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்குகள் ஆகும். குட்டி போட்டு, பாலூட்டும் விலங்குகளில் வௌவால் ஒன்றே பறக்கக் கூடியது. வௌவாலின் முன்கால் விரல்களையும், பின்காலையும் இணைத்-திருக்கும் மெல்லிய சவ்வானது பறப்பதற்கு உதவுகின்றது. கால்கள் அனைத்தும் சவ்வால் இணைக்கப்பட்டிருப்பதால் இதனால் தரையில் நடமாடமுடியாது. பின்கால்களில்உள்ள வளைந்தநகங்களின் உதவியால் காடுகளில் மரக்கிளைகளையோ பாழடைந்த வீடுகளில் விட்டங்களையோ பற்றிக்கொண்டு தலைகீழாகத் தொங்கும்.அப்படியே உறங்கவும் செய்யும்! வௌவால்களில் பல வகை உண்டு. ஒன்று நரிபோன்ற முகமுடைய பழந்தின்னி வௌவால். தமிழ் இலக்கியத்தில் இது வாவல் எனக் குறிப்பிடப்படுகின்றது. மற்றொன்று சிறிய உருவமுடைய துரிஞ்சில் எனப்படுவது. இது கொசு போன்ற பூச்சிகளை உண்ணும். உலகிலேயே பெரிய வௌவால்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்கின்றன. இவற்றின் உடல் நீளம் ஒரு அடியாகவும், இறக்கைகளின் நீளம் ஐந்தடியாகவும் இருக்கும். பறக்கும் நரிகள் என்று இவைகள் அழைக்கப்படுகின்றன. விலங்குகளின் இரத்தத்தைக் குடித்து வாழும் வௌவால்கள் மத்திய, தென் அமெரிக்கப் பகுதிகளில் வாழ்கின்றன. இவைகள் சில சமயம் ‘ரேபிஸ்’ போன்ற வியாதிகளைப் பரப்புகின்றன. இவ்வகை வௌவால்கள் சிலசமயம் மனித இரத்தத்தைக் குடிப்பதும் உண்டு.

வௌவால்கள் இரவு நேரங்களில் எதன்மீதும் மோதாமல் வேகமாகப் பறந்து செல்லும் ஆற்றல் படைத்தவை. கண்களின் கூரிய பார்வை காரணமாகத்தான் அவை இரவிலும் பறக்கின்றன என விலங்கியல் நிபுணர்கள் எண்ணினார்கள். ஆனால் கண்களைக் கட்டி விட்டபோதும் அவை தங்கு தடையின்றிப் பறந்து பூச்சிகளை வேட்டையாடின. காதுகளை அடைத்துப் பறக்கவிட்ட போது மட்டும் தடுமாறின. எனவே வௌவால்கள் குரல் ஒலியைப் பயன்படுத்திப்

பறக்கின்றன; இரை தேடுகின்றன என்று விந்தையைக் கண்டறிந்தனர். வௌவால்கள் வினாடிக்கு 30,000 முதல் 70,000 அதிர்வுகளைக் கொண்ட ஒலி அலைகளை எழுப்புகின்றன. இவை மீயொலிஅலைகள் (ultrasonic waves) என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஒலி அலைகளை மனிதனால் கேட்க முடியாது. வினாடிக்கு 20 முதல் 20,000 அதிர்வுகளைக் கொண்ட ஒலி அலைகளைத்தான் மனிதனால் கேட்க முடியும். இவ்வகையான ஒலி அலைகள் எதிரில் உள்ள சுவர் அல்லது மரத்தின்மீது பட்டுத் திரும்பவும் வௌவாலை அடையும் போது வௌவால்கள் அதை உணர்ந்து விலகிச் செல்கின்றன. ஒலி அலைகள் பட்டுத் திரும்பும் நேரத்தைக் கொண்டு எதிரில் உள்ள பொருள் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையும் இவை கணக்கிட்டுக் கொள்கின்றன. ஒலி அலைகள் கொசுக்களின்மீது மோதித் திரும்பும்போது அவற்றை உணர்ந்து, உடனே கொசுக்களை நோக்கிப் பறந்து சென்று பிடித்து உண்கின்றன. இவ்வாறாகத்தான் இருட்டிலும் கொசுக்களை இவை வேட்டையாடும் திறமை படைத்துள்ளன. 15 நிமிடங்களில் ஒரு வௌவால் 175 கொசுக்கள்வரை பிடித்துவிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர். ஒலி அலைகள் எவ்வெப்பொருளிலிருந்து வருகின்றன என்பதையும் அந்தந்த வௌவால்கள் இனம்அறிந்து உணர்ந்து கொள்கின்றன. ஒன்றின் ஒலிஅலைகளைக் கண்டு மற்றொன்று குழப்பம் அடைவதில்லை. சிலவகை வௌவால்கள் சிறு மீன்களைப் பிடித்து உண்டு வாழக்கூடியவை. இவை இரவு நேரங்களிலும் மீன் வேட்டையாடுகின்றன. மேலே பறந்து கொண்டே நீரை நோக்கி ஒலி அலைகளை அனுப்பும் நீருக்கு வெளியே வரும் மீனின் துடுப்பு, ஒலியை எதிரடித்தால் அதை உணர்ந்து உடனே கீழ்நோக்கிப் பாய்ந்து மீனைக் கவ்விவிடும். துடுப்பு போல் வேறு ஏதாவது ஒரு உயிரற்ற பொருள் காணப்பட்டால் அதை உணர்ந்து அதை நெருங்காது.

வௌவால்களின் இவ்வியக்கத்தக்க பண்பை அடிப்படையாகக் கொண்டே ராடார் செயல்படுகின்றது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு ஒலி அலைகளுக்குப் பதிலாக அவற்றை விட சக்திவாய்ந்த ரேடியோ சிற்றலைகள்(Microwaves)பயன்படுத்தப்படுகின்றன. ஒலிஅலைகளின் வேகம் வினாடிக்கு 330 மீட்டர்தான். ஆனால் ரேடியோ அலைகளின், வேகமோ வினாடிக்கு 3,00,000 கிலோமீட்டராகும். வௌவாலால்

தன் ஒலி அலைகளின் மூலம் அருகிலுள்ள பொருள்களைத்தான் அறிந்து கொள்ளமுடியும். ஆனால் ராடார் அனுப்பும் சிற்றலைகள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் சென்று திரும்பக்கூடியவை. ரேடியோ அலைகளைக் கொண்டு ஒரு பொருளின் அமைவிடத்தையும் தொலைவையும் அறிதல் (Radio Detection And Ranging) என்பதற்கான ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கமே ரேடார் (RADAR) ஆகும். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆங்கில-தமிழ் அகராதி இச்சொல்லுக்கு தொலைநிலை இயக்கமானி என்று பொருள் தந்துள்ளது. ராடார் என்ற சொல்லையும் இவ்வகராதி ஒத்துக்கொள்வதனாலும், உலக முழுதும் இச்சொல்லே வழக்கில் இருப்பதனாலும், இதனையே இக்கட்டுரையில் பயன்படுத்தி உள்ளேன்.

முதன் முதல் 1935 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இரபார்ட் வாட்சன்வாட் என்ற விஞ்ஞானியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழு ராடாரைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் விளைவாக இங்கிலாந்தின்கடற்கரையோரங்களில் ராடார்கள் அமைக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்திற்கு ராடார்கள் பேருதவியாக இருந்தன. இதன் மூலம் நூற்றுக்கணக்கான எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டன. அக்காலத்தில் ராடாரைப் பற்றி எந்தக் குறிப்பும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அமெரிக்காவில் ராடாரைப் பற்றிய எந்தக் குறிப்புக்கும் அடியில் 'படித்தபின் எரிக்கவும்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். அவ்வளவு ரகசியமாக ராடார் பற்றிய செய்தியினை அமெரிக்காவில் மறைத்து வைத்திருந்தனர். ஆயினும் இரண்டாம் உலகப் போருக்குப் பின் ராடாரைப் பற்றி பல நாடுகள் ஆய்வு செய்யத் துவங்கின. இன்று ராடார் பயன்படாத துறையே இல்லை எனலாம்.

**ராடாரின் அமைப்பு, செயல்:**

ரேடியோ அலைகளை அனுப்பும் கருவி அலைபரப்பி (transmitter) ஆகும். எதிரடிக்கப்பட்டு வரும் அலைகளை வாங்கும் கருவி அலை ஏற்பி (Receiver) ஆகும். அலை ஏற்பியானது ஒரு நீளமான ஏரியலுடன் இணைக்கப்பட்டிருக்கும். வலுவில்லாதமெல்லிய அலைகளையும் வாங்கிக் கொள்ள இந்த ஏரியல் பயன்படுகிறது. இவ்வமைப்பு

முழுவதும் ஒரு கோபுரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும். எதிரடிக்கப்பட்டு வரும் அலைகளை ஏரியல் பற்றிக்கொண்டு ஏற்பியில் சைகையை ஏற்படுத்துகிறது. ஏற்பி ஒரு எலெக்ட்ரான் கதிர்க் குழாயுடன் (cathode Ray tube) இணைந்து செயல்பட்டு ராடார் திரையில் ஒளிப்புள்ளிகளை ஏற்படுத்துகிறது. இலக்கு (எதிரடிக்கும் பொருள்) சிறியதாக இருந்தால் சிறிய ஒளிப்புள்ளிகள் ராடாரில் தோன்றும். பெரிய பொருளாக இருந்தால் ராடார் திரையில் பிரகாசமான ஒளிப்புள்ளிகள் தோன்றும். இம் முறையையே அடிப்படையாகக் கொண்டு எல்லாவிதமான ராடார்களும் இயங்குகின்றன.

**விமானப் போக்குவரத்தில் ராடார்:**

விமான நிலையங்களில் ராடாரானது கம்ப்யூட்டரின் உதவியுடன் செயல்படுகிறது. எத்தனையோ கிலோமீட்டர்களுக்கு அப்பால் ஆயிரக்கணக்கான மீட்டர் உயரத்தில் வரும் விமானங்களை இது கண்டு கொள்கிறது. உடனே கட்டுப்பாட்டுக் கோபுரத்திலுள்ள (control tower) ராடார் திரையில் ஒளிப்புள்ளி தோன்றும். ஒளிப்புள்ளியானது ராடார் திரையில் தோன்றியவுடன் விமானம் வருவதை நிலையத்திலுள்ளவர்கள் அறிந்துகொள்கின்றனர். உடனே விமானம் இறங்கவேண்டிய ஓடுபாதை, கோணம் முதலியவற்றை விமானிக்குக் கட்டுப்பாட்டுக் கோபுரத்திலுள்ளவர்கள் ரேடியோ மூலம் அறிவிப்பர். சில விமான நிலையங்களில் இந்த அறிவிப்பையும் கம்ப்யூட்டர்களே செய்து விடுகின்றன. இருநூறு ஓடுபாதைகளை ஒரே சமயத்தில் இவ்வகையான ராடார் அமைப்பு கண்காணிக்கின்றது.

**விண்வெளியியலில் ராடார்:**

செயற்கைக் கோள்களை விண்வெளியில் செலுத்துவதற்கும் அதன் பாதையைத் திருத்துவற்கும் ராடார் உதவுகின்றது. பூமியிலிருந்து மற்ற கோள்களுக்கு இடையே உள்ள தூரத்தைத் துல்லியமாகக் கணக்கிடவும் உதவுகின்றது. 1961 ஆம் ஆண்டு சோவியத் விஞ்ஞானிகள் வியாழனை ராடார் உதவியால் ஆராய்ந்தனர். பூமியிலிருந்து வியாழனை நோக்கி ராடார் அலையானது அனுப்பப்பட்டது. அது வியாழனை அடைந்து, எதிரடிக்கப்பட்டு, திரும்பிவர

சுமார் 66 நிமிடங்கள் ஆகியது, இதைக் கொண்டு பூமிக்கும் வியாழனுக்கும் இடையே உள்ள தூரம் 1,00,000,000 கி.மீ. என அறிவித்தனர்,

**எதிர் ஏவுகணை கூட்டமைப்பு ராடார்கள்**

தற்காலத்திய போர்முறையில் ஏவுகணைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் சென்று குறிப்பிட்ட நகரையே அழிக்கும் வல்லமை கொண்ட அணுகுண்டு பொருத்தப்பட்ட ஏவுகணைகளை வல்லரசுகள் அமைத்துள்ளன. இவ்வகை ராடார்கள் இவ் ஏவுகணைகளின் வருகையை முன்கூட்டியே அறிவித்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறது. அமெரிக்காவில் லெங்டான் எனுமிடத்தில் பூமிக்கடியில் பாதுகாப்பான காங்கிரீட் அறையில் எதிர் ஏவுகணை கூட்டமைப்பு அமைக்கப் பட்டுள்ளது. எதிரியின் ஏவுகணைகள் சுமார் 1500 கி.மீ. தூரத்திற்கு அப்பால் வரும்போதே அவைகளை இனம் கண்டு கொண்டு அவற்றின் பாதையையும், தூரத்தையும், வேகத்தையும் அறிந்து கம்ப்யூட்டருக்கு தகவல் அளிக்கும். உடனே கம்ப்யூட்டர் பூமியில் மறைத்துத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் ஏவுகணைகளைச் சரியான பாதையில் ஏவிவிடும். இரு ஏவுகணைகளும் ஒன்றையொன்று ஆகாயத்திலேயே தாக்கிக்கொண்டு அழிந்து போகும். இதனால் குறிப்பிட்ட நகரமோ அல்லது தொழிற்சாலையோ அழிவிலிருந்து காப்பாற்றப்படும். இவ்வகை ராடார்களின் எடை சுமார் 200 டன் களாகும்

**தரைப்படையில் ராடார்**

சுமார் 4.5 கிலோ எடையுள்ள சிறிய ராடார்கள் உள்ளன. இவற்றை படைவீரர்கள் தூக்கிச் செல்வர். 6 கி.மீ. தொலைவில் வரும் எதிரிகளையோ டாங்குகளையோ இவ்வகை ராடார்கள் இனங்கண்டு கொள்ளும்; உடனே ஒலி எழுப்பும். வெவ்வேறு பொருள்களுக்கு வெவ்வேறு ஸ்தாயியில் ஒலி எழுப்பும். இதைக் கேட்டுப் பழக்கப்பட்ட இராணுவவீரர் வரும்பொருளை அனுமானித்துவிடுவர் 300மீட்டருக்கு அப்பால் கட்டப்பட்டுள்ள நைலான் கயிற்றைக்கூட அறிந்து சொல்லும் வல்லமை படைத்தவை இவ்வகை ராடார்கள்.

**கப்பலில் ராடார்**

கப்பலில் பொருத்தப்பட்டுள்ள ராடார்கள் கடலில் மறைந்திருக்கும் பாறைகளிலிருந்தும், பனிப்புயலிலிருந்தும் விலகிச் செல்ல உதவுகின்றன. ரஷிய நாட்டைச் சேர்ந்த எண்ணெய்க் கப்பல் ஒன்று அட்லாண்டிக் கடலில் சென்று கொண்டிருந்தது. அக்கப்பலில் பொருத்தப்பட்டிருந்த ராடார் திரையானது இனம்புரியாத கறுப்புப் பந்து ஒன்று வருவதைக் காட்டியது. உடனே கப்பல் தலைவர் எச்சரிக்கையுடன் ஜன்னல்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிட்டார் சில நிமிடங்களில் பூலட்சக்கணக்கான வெட்டுக்கிளிகள் கொண்ட ஒரு படை கப்பலைக் கடந்து சென்றது மூலை முடுக்கெல்லாம் சிக்கிக்கொண்ட வெட்டுக்கிளிகளை ஒரு நாள் முழுவதும் வேலை செய்து அகற்றினராம். எச்சரிக்கையாக முன்கூட்டியே ஜன்னல்கள் மூடப்படாமல் இருந்திருந்தால் கப்பல் முழுவதும் வெட்டுக்கிளிகளே நிறைந்திருக்கும்.

வானிலை ஆய்வாளர்கள் ராடார்கள் மூலம் மேகங்கள், புயல் முனைகள் சூறாவளிகள் முதலியவற்றைக் கண்காணித்து உடனே நாடெங்கும் எச்சரிக்கை செய்கின்றனர். குருடர்களுக்கு உதவும் ராடார்களை மேல் நாடுகளில் அமைத்துள்ளனர். இவை மிகச் சிறியவை மூக்குக் கண்ணாடியில் பொருத்திக் கொள்ளலாம் எதிரில் உள்ள தடைகளை அறிந்து அதற்கேற்றாற்போல் ஒலி எழுப்பிக் குருடர்களை வழி நடத்துகின்றன இவ்வகை ராடார்கள் சாலைகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், நாட்டின் கனி, இயற்கை வளங்களைக் கண்டறியவும், நிலத்தடி நீரின் அளவை அறியவும் இன்னும் பல துறைகளிலும் உதவுகின்றன. இயற்கையின் படைப்பான வௌவாலும் செயற்கையில் மனிதன் செய்த ராடாரும் ஒரே அடிப்படையிலேயே இயங்குகின்றன. இயற்கையிலிருந்து மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய வியத்தகு இரகசியங்களும், உண்மைகளும் இன்னும் எவ்வளவோ உள்ளன.

# விடைகாண இயலாத விந்தை

செந்தமிழ்த் தொகுதி -75, பகுதி 1 (மார்ச் 1981) இதழில் ''பறவைகளின் வலசை'' என்ற தலைப்பில் திரையனின் விஞ்ஞானக் கட்டுரை ஒன்று வெளியாகியது. குறிப்பிட்ட ஒரு சில இனத்தைச் சார்ந்த பறவைகள் விளக்கு வெளிச்சத்தில் வந்து விழுந்து மயங்கி மடிகின்றன என்றும், அஸ்ஸாம் மாநிலத்தில் ஜாடிங்கா என்னுமிடத்தில் நடக்கும் இந்தப் பறவைகளின் தற்கொலைக்குரிய காரணம் விளங்கவில்லை என்றும் அக்கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருந்தார். செந்தமிழில் அக்கட்டுரை வெளிவந்து ஆறு திங்களுக்கு மேல் ஆகிவிட்டன. செப்டம்பர் 21 - ந்தேதிய தினமணி (பக்.2) நாளிதழில் இச்செய்தி தனியொரு தலைப்பில் வெளியாகி உள்ளது. செந்தமிழ் அன்பர்கட்குத் தெரிந்த செய்தி; முன்னமேயே நமது இதழில் வெளி வந்தமையான், தொடர்பானது என்பதோடு உலகில் வேறெங்கணும் நிகழாத நிகழ்ச்சி என்பதாலும் 'தினமணி' நாளிதழில் வந்த செய்தி கீழே வெளியிடப்படுகிறது.

— ஆசிரியர்.

## தற்கொலைப் பறவைகள்

ஹாவ்வாங் (அஸ்ஸாம்) செப் 20— விஞ்ஞானிகளுக்கே புரியாத விந்தையாய்த் திகழும் ''தற்கொலைப் பறவைகள்'' பற்றி மேலும் ஒரு மர்மம் புலனாகியுள்ளது.

அஸ்ஸாம் மாநிலம் சச்சார் - மாவட்டம். மூடுபனி சூழ்ந்த சமவெளி. பச்சைப் பசேலென்று புற்களும், மரங்களும் செடி, கொடிகளும் நிறைந்த செழிப்பு. இதமான குளிர்காற்று இந்தச் சூழ்நிலையில்தான் ஜட்டிங்கா என்ற கிராமம் அமைந்துள்ளது.

இந்த கிராமம்தான் பறவைகளின் 'தற்கொலைமையம்'.

நடப்பட்டிருக்கும் கம்பங்களில் உள்ள விளக்குகளில் மோதும் பறவைகள் வைராக்கியமாக பட்டினி கிடந்து சாகின்றன என்பது தான் தற்போது வெளியாகியுள்ள மர்மம்.

விளக்கில் மோதும் பறவைகள் உடனே கீழே விழுகின்றன. விழுந்தால் விழுந்ததுதான். என்ன செய்தாலும் பறக்க முயற்சிப்பதில்லை. அவற்றைக் கூண்டில் அடைத்து வைத்து உணவு கொடுத்-

தாலும், உண்ணுவதில்லை. இப்படி அல்லது 3 நாட்கள் வைராக்கியமாக பட்டினி கிடந்து அவை மடிகின்றன.

கடந்த 3 வாரங்களாக பறவை ஆய்வு நிபுணர்கள் இந்த அதிசயத்தை ஆராய்ந்தனர். பறவைகளின் இந்த அடக்க முடியாத 'தற்கொலை வெறி' யைக் கண்டு வியப்படைந்தனர்.

புதிரின் தொடக்கம்

இந்த தற்கொலைப்படலம் முதன் முதலில் கண்டறியப்பட்டது. 1905ஆம் ஆண்டில் அன்றுமுதல் இன்றுவரை இந்தப் புதிர் தொடருகிறது.

1905ம் ஆண்டில் ஒருநாள் இரவு நேரம். ஜட்டிங்கா கிராமத்தில் சில எருமை மாடுகள் காணாமல் போய் விட்டன. கையில் தீவட்டிகளுடன் மாடுகளைத் தேடிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் இந்த அதிசயம் நடந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த பலஅழகிய பறவைகள் தீவட்டிகளில் மோதி கீழே விழுந்து உயிர் விட்டன.

அதற்குப்பின்பு கிராமத்தினர் மூங்கில் கம்பங்களில் விளக்கு-களைக் கட்டி விட்டனர். பறவைகள் மோதி விழுந்தன. பிறகென்ன! சிரமமில்லாத பறவை வேட்டை தான்.

ஒவ்வோராண்டும் ஆகஸ்டு முதல் அக்டோபர் வரை இந்த 'ஒட்டு மொத்த தற்கொலை நடைபெறும்.

பறவைகள் விளக்கில் மோதி தற்கொலை செய்து கொள்ளும் இந்த மர்மத்தை ஆராய்வதற்காக அஸ்ஸாம் வனத்துறை ஒரு கண்காணிப்பு மையத்தை நிறுவியுள்ளது. சுமார் 25 அடி உயரத்தில் ஒரு 'கண்கணிப்புக் கோபுரம்' அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்துதான். ஆய்வு நடைபெறுகிறது.

ஜட்டிங்காவில் ஹோாவெல் ருப்ஸி என்ற பெயருடன் ஒருவர் இருக்கிறார். சிறுவயதிலிருந்தே இந்த தற்கொலையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறார். குறிப்பிட்ட சில வருடங்களில் மட்டும் எப்போதுமில்லாத அளவிற்கு ஏராளமான பறவைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளன என்று அவர் கூறினார்.

விஞ்ஞானிகள் விடை கண்டறியாத - விடைகாணத் துடிக்கும் எத்தனையோ விந்தைகள் உள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று.

# தமிழில் ஷேக்ஸ்பியர்-

## —1900 ஆம் ஆண்டு வரை

— பழனி அரங்கசாமி
மதுரைப் பல்கலைக் கழகம்

நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கில நாட்டில் தோன்றிய வில்லியம் ஷேக்ஸ்பியரின் புகழ் இன்று உலகளாவி நிற்கிறது. நாடகமேடைக்கு வந்த 26 ஆண்டுகளுக்குள் அவர் எழுதியவை முப்பத்தேழு நாடகங்கள். ஹாம்லெட், ஒதெல்லோ, மாக்பெத், லீயர் மன்னன் போன்ற துன்பியல் நாடகங்களும், இரண்டாம் ரிச்சர்டு, நான்காம் ஹென்றி போன்ற ஆங்கில வரலாற்றுச் சார்புடையனவும், பன்னிரண்டாம்இரவு, விரும்பியவண்ணமே போன்ற இன்பியல் நாடகங்களும் அவற்றுள் அடங்கும் தமிழ்நாடக மரபில் துன்பியல் என்கின்ற பிரிவு இல்லை. நாடக இலக்கணம் கூறும் பிரதாபருத்தரியம் போன்ற வடமொழி நூல்களும், நாடகம் மங்களமாக நிறைவுற வேண்டும் என்கின்றனவேயன்றி கிரேக்க மொழி நாடகங்கள்போல துன்பியல், இன்பியல் பற்றிப் பேசவில்லை. ஐந்தாம் நூற்றாண்டின் கிரேக்க நாடக மரபினை ஊன்றுகோலாகக் கொண்டெழுந்தாலும் மேலும் பல புதிய நாடகக் கூறுகளைத் தன்பாற் கொண்டெழுந்த சுவைமிக்க ஷேக்ஸ்பியர் நாடகங்கள் உலகெங்கணும் பெயர்த்தெழுதப்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை. நானிலம் தழீஇய புகழ்பெற்று நிற்கும் இந்நாடகாசிரியர் உயர்நிலைப் பள்ளியையும் கல்லூரியையும் கண்டறியாதவர். ஆரம்பப் பள்ளியிலே மட்டும் பயின்றவர். லண்டன் மாநகரில் பல்வேறு நாடக அரங்குகளில் பணிபுரிந்தபோது தாம் கண்டனவற்றையும், கேட்டனவற்றையும் வைத்துத் தமக்குக் கிடைத்த பழைய புராணங்களையும், கதைகளையும், வரலாறுகளையும் மையமாகக் கொண்டு நாடகங்களைத் தீட்டியுள்ளார் மூலக்கதைகள் அனைத்தும் இரவல். உரைநடையும், கவிதையும் கலந்து எழுதப்பட்டுள்ள அவரது அனைத்து நாடகங்களிலும், இலக்கணப் பிழைகள் ஏராளம். ஆயினும், அவருடைய தனித்தன்மைக்கும் புகழுக்கும் காரணம் யாது?

ஷேக்ஸ்பியர் நாடகங்களில் பயின்று வரும் நூற்றுக் கணக்கான கதாபாத்திரங்கள் சாகாவரம் பெற்றவர்கள். நம்மிடையே இன்றும் வாழ்கிறார்கள். அவர்களை வைத்து மானுடத்தின் வீரத்தை, ஆசையினை, விரக்தியினை, அழகினை, அற்புதத்தை. நற்குணத்தை நயவஞ்சகத்தை, நச்சுத் தன்மையினை ஷேக்ஸ்பியர் எப்படியெல்லாமோ படம்பிடித்துக் காட்டிவிடுகிறார். உலகம் என்னும் நாடக மேடையில் அவர் பெற்ற அனுபவம் அவரது ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் பளிச்சிடுகிறது. மீண்டும் மீண்டும் படித்தாலும் அலுப்புத் தட்டாத சொல் அழகும், கருத்தாழமும், பொருள் நயமும் சிற்சில நாடகங்களிலாவது சிறப்புறக் காணப்படுகின்றன. நானூறு ஆண்டுக் காலமாக இலக்கிய உலகத்தாரால் சிறந்தவை என்று கருதப்படும் அத்தகு நயமான சில நாடகங்களே உலகனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டும் வந்துள்ளன. அவரெழுதிய முப்பத்தேழு நாடகங்களுமே பெருமையுடைத்து என்று சொல்லுதற்கில்லை. சிறந்தனவாகத் தெளிந்து நிற்பனவே காலத்தை வென்று பிறமொழியாளரின் கருத்துக்கு விருந்தாய் அமைந்துள்ளன.

ஆயின், தமிழ் மொழியில் ஷேக்ஸ்பியரின் நுழைவு எப்போது? ஆங்கிலக் கலாச்சாரத்தின் பின்னணியில் எழுதப்பட்ட அவரது நாடகங்கள் அருந்தமிழில் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டனவா? திருத்தியும் மாற்றியும் பெயர்க்கப்பட்டனவாயின் அவை எத்தகு மாற்றங்கள்? அவற்றைத் தமிழ் நாட்டுக்கேற்பத் தழுவிச் செய்தவர் யாவர்? ஷேக்ஸ்பியர் நாடகங்களினாலே தமிழ்நாடக உலகம் மறுமலர்ச்சி அடைந்ததா? ஆங்கில நாட்டில் நடிப்பதற்கென்றே எழுதப்பட்ட அவரது நாடகங்கள் பிற்காலத்தில் படிப்பதற்கும் பயன்பட்டன பதினாறாம் நூற்றாண்டின் இந்த நாடகக்கவிஞரது நாடகங்கள் தமிழகத்துக்கு வந்தபோது அவை மேடைக்குத்தான் பயன்பட்டனவா? ஆயின் அதற்குமுன் தமிழ்நாடகங்களின் நிலை என்ன? இவற்றுக்கும் இன்னபிற வினாக்களுக்கும் விடைகாண்பது அறிவுக்கு விருந்தாக அமையும்.

ஆங்கில மொழியின் தோற்றமும் தொடக்கமும் கி.பி 11-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் அதிலும் இற்றை நாளில் புழக்கத்தில் இருக்கின்ற ஆங்கிலத்தின் தொடக்க காலம் 15-ஆம் நூற்றாண்டு அம்மொழியின் தலைசிறந்த நாடகக் கவிஞராகத் திகழ்ந்த

ஷேக்ஸ்பியர் பதினாறாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அவரது பற்பல நாடகங்களின் சாயலும், செல்வாக்கும் தமிழ்நாடகங்களில் காணக்கிடக்கிறது. தமிழ் நாடகத்தின் தொன்மைபற்றிப் பேசுகின்றோர் அனைவரும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகின்ற பஞ்சமரபு, பரதசேனாபதியம், பெருநாரை, பெருங்குருகு, இந்திரகாளியம் ஆகிய இசை நாடக நூல்களைச் சுட்டிக் காட்டுகின்றனர். இவையனைத்தும் இப்போது இல்லை. மேலும் இவையெல்லாம் நாடக இலக்கண நூல்களேயன்றி நாடகநூல்கள் அல்ல.

தொல்காப்பியத்தில் வரும் ''நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும்' என்ற சொற்றொடரும், திருவாசகத்தில் ''வரும் நாடகத் தால் உன்னடியார் போல்நடுவே'' என்பதும் நாடக வழக்குண் மையைப் புலப்படுத்துகின்றன. தமிழில் நாடகங்கள் இருந்துள்ளன. நாடக இலக்கணம் கூறும் நூல்கள் இருந்ததாகக் குறிப்புகள் உள்ளன. நாடகக்கலை முழுவளர்ச்சி அடைந்த பின்னரே நாடக இயல்பு கூறும் இலக்கணங்கள் தோன்ற முடியும் ஆயின் முற்காலத்தில் இருந்ததாக நாம் அனுமானிக்கும் நாடகங்கள் எங்கே? செல்லரித்துப் போயினவா? கடல் கோளால் அழிந்தனவா? இசையும், நாடகமும், இன்னபிற கேளிக்கைகளும் தீ நெறிக்கு உய்ப்பன என்று எண்ணி அமணர்கள், புத்தர்கள் காலத்தில் ஒட்டுமொத்தமாக வழக்காற்றில் இருந்த நாடகங்கள் அழிக்கப்பட்டனவா என்ற ஐயப்பாட்டுக்-செல்லாம் தெளிவான தீர்வு இல்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. நாடகக்கலை பொலிவிழந்துநசித்துக் கிடந்தாலும், நாடகச்சாயலைக் காட்டுவனவாக உள்ள நொண்டி நாடகம், பள்ளு, குறம், அம்மானை போன்றவை காலந்தொறும் வளர்ந்து வந்துள்ளன. இயலும், இசையும் வளர்ந்திருக்க, நாடகம் மட்டும் நலிந்தும் சிதைந்தும் கிடக்கின்ற நிலை அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது.

முத்தமிழ் என்ற சொல் வழக்குக்குப் பொருளில்லாமல் போய் விடுகிறதே என்று அவ்வாறு மனம் புழுங்கியவருள் குறிப்பிடத்தக்கவர் இருவர். நடிப்பதற்கென்று இல்லாவிடினும், படிப்பதற்கென்று மனோன்மணிய நாடகம் எழுதிய சுந்தரம் பிள்ளை; நாடக இலக்கணம் தமிழில் இல்லாத குறையினைப் போக்க எண்ணி 'நாடக இயல்,

தந்த பரிதிமாற் கலைஞர். இந்த இருவரும் ஆங்கிலம் பயின்ற தமிழறிஞராவர். ஆங்கிலத்தொடர்பினாலே தமிழை வளப்படுத்திய பெருமை இவர்களுக்கு உண்டு பல்வர் லிட்டன் எழுதிய ஒரு ஆங்கில நாவலைத்( The Secret way தழுவி மனோன்மணியம் எழுதப்பட்டது. இதனுள் அங்கம், களம் ஆகிய நாடகப் பிரிவுகள் ஷேக்ஸ்பியரது நாடகங்களைஒட்டியே அமைக்கப்பட்டுள்ளன. ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அனைத்தும் ஐந்து அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன போன்று மனோன்மணியமும் ஐந்து பெரும்பிரிவுகளால் ஆக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடக மரபில் இல்லாத துன்பியல், இன்பியல், தனிமொழி (soliloquy) ஆகியவற்றை விளக்குவதற்கும், சான்று காட்டுவதற்கும் பரிதிமாற் கலைஞர் ஷேக்ஸ்பியரை எடுத்தாளுகிறார்.

எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சியில் நாட்டம் கொண்ட யாரும் ஷேக்ஸ்பியரைப் புறக்கணிக்க முடியவில்லை. பிரெஞ்சு நாடக ஆசிரியரான மோலியர், நார்வே நாட்டைச் சார்ந்த இப்சென், ஷேக்ஸ்பியருக்குப் பின்னால் வந்த ஜான் டிரைடன் ஆகியோரின் நாடகங்களும் தமிழில் வந்திருந்தாலும் அதிக அளவில் பெயர்த்தெழுதப்பட்டுள்ள பெருமை ஷேக்ஸ்பியரது நாடகங்களுக்கே உண்டு.

வெள்ளையர் ஆட்சி வேரூன்றிய காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை கல்லூரிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம் பாட மொழியாக இருந்தமையான், ஆங்கில நாடக நூல்களின் நுழைவு மிகவும் எளிதாக அமைந்து விட்டது. ஷேக்ஸ்பியர் நாடகங்கள் கட்டாய பாட நூல்களாகப் பயிலப்பட்டன, சென்னை, திருச்சி, கோவை போன்ற பெருநகரங்களில் இருந்த ஆங்கிலேயர் மேற்கத்திய நாடகங்களை அரங்கேற்றினர். இற்றை நாட்களைப் போலன்றி தமிழகத்தில் சென்னை, கோவை, குடந்தை, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, வேலூர் போன்ற நகரங்களில் மட்டுமே கல்லூரிகள் இருந்தன. முன்னாட்களில் அங்கெல்லாம் கல்லூரி முதல்வர்களாகப் பணியாற்றிய ஆங்கிலேயர்கள் தத்தமது கல்லூரியில் விழா நிகழ்ச்சிகளில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை மாணவர்களைக் கொண்டே நடிக்கச் செய்தனர் கல்லூரியில் நடிப்பதற்கென்றே ''வெனிஸ் வியாபாரி' என்ற

நாடகத்தை வேணுகோபாலாச்சாரியார் (1874) எஸ். நாராயணசாமி அய்யர் (1893) ஆகியோர் நாடக உருவில் பெயர்த்தெழுதியது இதற்குச் சான்றுகளாகும். இவருள் நாராயணசாமி அய்யர் குடந்தை அரசினர் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அந்தக் கல்லூரி முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க அதனைப் பெயர்த்தெழுதியதாகத் தமது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இத்தகு ஒரிரு சான்றுகளைத் தவிர பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தமிழில் பெயர்க்கப்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அனைத்தும் நாடக உருவிலோ கவிதையாகவோ இன்றி வெறும் உரைநடையில் தரப்பட்டுள்ளன. கையடக்கமான அளவில் ஓரணா, இரண்டு அணா விலையில் எளிய தமிழில் கதை வடிவில் அந்நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போது கிடைக்கின்ற அத்தகு சிறு பெயர்ப்புகளுள் முதன்முதலாக 1870-ஆம் ஆண்டு வெளிவந்தது வெனிஸ் வியாபாரி என்னும் நாடகத்தின் சுருக்கம்தான். ஷேக்ஸ்பியர் பிறந்த ஸ்ட்ராட்போர்டு என்ற இடத்தில் அவர் பெயரால் நிறுவப்பட்ட இலக்கியக் கழகத்தின் பெரிய நூலகம் ஒன்றுளது. அவர்களிடம் உள்ள தமிழ்மொழி பெயர்ப்புகளிலும் மிகப் பழமையானது இந்த, இச்சிறு நூல்தான். இதனை எழுதியவர் விசுவநாத பிள்ளை. இவர் சென்னை மாநிலக் கல்வி அதிகாரியின்கீழ் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிந்தவர் வெனிஸ் வியாபாரி என்னும் நாடகத்தின் கதைச்சுருக்கத்தோடு பிரசண்டமாருதம் (The Tempest), டென்மார்க் அரசன் (Hamlet), ஆர்த்தர் இளவரசன் கதை (King John), மக்பெத் (Macbeth) போன்ற தலைப்புகளில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைச் சுருங்கிய அளவில் இவர் வெளியிட்டார்.

ஷேக்ஸ்பியரைப் பெயரளவில் புரிந்து கொள்ளுவதற்கும், அவரது கதைகளைத் தமிழகத்தில் தமிழ்மொழியில் அறிமுகப்படுத்துவதற்கும் இச்சிறு நூல்கள் பயன்பட்டன. விசுவநாத பிள்ளையைத் தொடர்ந்து பண்டித நடேச சாஸ்திரி, எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, ராமசாமி ராசு, பவானந்தம் பிள்ளை, எஸ். டி சாமி ஆகியோரும் ஷேக்ஸ்பியர் நாடகங்களைச் சிறுகதை வடிவில் தமிழுக்கு அறிமுகப்படுத்தியோர் ஆவர். இவரெலாம் ஆங்கிலம் பயின்றவர்கள்

என்பதோடன்றி ஆங்கில இலக்கியமும், விஞ்ஞானமும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், மக்களின் நன்மைக்கும் பயன்பட வேண்டும் என்று கருதியவர்கள். இவருள் ராமசாமி ராசு என்பார் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தவர் பவானந்தம் பிள்ளை அன்றைய சென்னை நகரத்தின் காவல்துறை அதிகாரியாகப் பணி புரிந்தவர். இவர் பெயரால் நூலகம் ஒன்றும் பவானந்தம் கழகம் என்ற நிறுவனமும் சென்னையில் நெடுங்காலம் இயங்கி வந்தது.

ஆரம்ப கால மொழிபெயர்ப்பு நூல்களைக் கதை வடிவில் வெளியிட்ட நிறுவனங்களுள் ஒன்று பற்றி (Madras School Books and Vernacular Literature Society) பம்மல் சம்பந்த முதலியார் "பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகங்களை அச்சிடுவதற்கும், திராவிட பாஷையில் நூதன புத்தகங்கள் அச்சிடுவதற்கும்" இந்-நிறுவனம் பணிபுரிந்தது என்று கூறுகிறார்

(தொடரும்)

# வாழ்த்துரை

தமிழக அரசில் அமைச்சராகப் பணிபுரிந்து வருகின்ற மாண்புமிகு. கா. காளிமுத்து அவர்கள் செய்த அரிய தமிழ் ஆராய்ச்சியின் பயனாக மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. அரசியலில் ஈடுபட்டும் ஆய்வுக் கென்று நேரம் ஒதுக்கி இலக்கிய ஆய்வுசெய்த மாண்புமிகு. அமைச்சர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்றவர்கள். தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டவர் என்பதோடு தமிழ்ச் சங்க வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் காட்டுபவர் என்கின்ற முறையில் அமைச்சர் அவர்களைச் 'செந்தமிழ்' உளமாரப் பாராட்டுகிறது.

தமிழக அமைச்சரவையில் நாவன்மை மிக்க சொல்லேருழவராகவும், சிறந்த எழுத்தாளராகவும் விளங்குகின்ற டாக்டர். கா. காளிமுத்து அவர்கள் மேலும் பல அரிய நூல்கள் எழுதி அருந்தமிழ்ப் பெரும்பணியினைத் தொடர்ந்து செய்ய வேண்டுகிறோம். அமைச்சராக இருப்போர் பல்கலைக் கழகங்களில் ஆய்வு செய்து பட்டம் பெறுதல் இதுவே இந்தியத் துணைக்கண்டத்தில் முதலாவது நிகழ்ச்சி என்பதால் நமது அன்புசால் அமைச்சர் அவர்களை மீண்டும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

# படகுப் பயணம்

—பழநி. அரங்கசாமி

வளைந்து ஓடும் காவிரி நதியின்
வண்ணம் அதுவே நீல நிறம்!
அளைந்து மூழ்கி அலசிப் பார்த்தால்
அனைத்து மணலும் தங்க நிறம்!

குழைந்து செல்லும் நீல நதியின்
குளிர்ந்த கரையில் பச்சை நிறம்!
தழைந்த மரத்தின் கிளையெல்லாம்
தளிரும் பூக்களும் மஞ்சள் நிறம்!

நீரில் நெளியும் நீண்ட படகில்
நேரிய கம்பம் கறுப்பு நிறம்!
வாரில் வலித்துக் காற்றைப் பிடிக்கும்
வண்ணப் பாய் தான் வெள்ளை நிறம்!

காலைப் படகில் பயணம் செய்தால்
கரையில் தெரிவது ஆலைகள் தாம்!
சாலைகள் சந்திகள் கழனிகள் காடுகள்
சடுதியில் மறைந்து போகுது பார்!

மண்ணில் முளைத்து விண்ணை முட்டும்
எண்ணரு மலைகள் காணீரோ!
கண்ணிலடங்காக் கவினுறு காட்சி
கண்டு மகிழ்ச்சி கொள்ளீரோ!

கிழக்கில் பாயும் அன்னப் படகின்
கீழே அமர்ந்து பாரீரோ!
கழனிகள் தோறும் உழவர்கள் பாடும்
களிப்பும் இசையும் கேளீரோ!

ஊர்ந்து செல்லும் பள்ளிச்சிறார்கள்
உற்றுப் பார்ப்பதைக் காணீரோ!
இவர்ந்து செல்லும் குதிரை வீரர்
எங்கோ விரைதல் பாரீரோ!

அல்லும் பகலும் பயணம் செய்தால்
அலுப்போ சலிப்போ ஏதுமிலை!
இன்பப் பயணம் இதிலே வந்து
என்னுடன் நீயும் சேருவையோ?

மதிப்புரை:

## சிலையாக நிற்கின்ற செந்தமிழ்ச் செல்வர்கள்

— கவிஞர் இறையரசன்
தனிநாயகர் தமிழாய்வு மன்றம்
மதுரை—10

அண்மையில் மதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி (ஜனவரி-1981) நகரின் பல்வேறிடங்களில் தமிழறிஞர் பன்னிருவருக்குச் சிலைகள் திறந்து வைக்கப் பெற்றன. சிலையாக இருக்கின்ற இச் செந்தமிழ்ச் செல்வர்கள் அனைவரைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாச் செய்திகளை உள்ளடக்கியதே இச்சிறு நூல் பாண்டித்துரைத் தேவர், வீரமா முனிவர் தனிநாயக அடிகள் ஆகியோரைப் பற்றிய செய்திகள் நிரம்ப உள்ளன. 1-9-1901-இல் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்ட செய்தியும், பாண்டித்துரைத் தேவரின் மாரிநிகர்த்த கொடைத் திறமும் சிறப்புறக் கூறப்பட்டுள்ளன. வேதநாயகம் பிள்ளை, புத்தேரிக் கவிமணி ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பில் அவர்தம் கவிதைகளிலிருந்தே நிறைய மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. சைவ சமயத்தின் அரும் பெருங் காவலராகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரைப் பற்றி ஒன்றேகால் பக்க அளவில் செய்திகள் சுருங்கி விட்டன. மேலும் பல செய்திகளைச் சேர்த்திருக்-கலாம் சாதி சமயப் பூசல்களின்றிச் சமுதாயம் தழைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இல்லை. இதற்குரிய ஆக்க பூர்வமான செயல்களைச் செய்யாமல் மேலோட்டமாக சில காரியங்-களை மட்டுமே செய்கிறோம். உருவத்தை விட்டுவிட்டு நிழலோடு போராடுவதை ஒத்த செயல் இது. பாண்டித்துரையார், வேதநாயகர், கவிமணி தேசிக விநாயகம் என்று வெறுமனேபோட்டு விட்டால் மட்டும் சாதீயம் தொலைந்து விட்டதாக இந்நூலாசிரியர் எண்ணி இருக்-கலாம். அது சரியா, தவறா என்ற விவாதத்திற்கு வராமல், கொள்கை அளவில் நாம் அதனை ஒத்துக் கொண்டாலும், உ.வே. சாமிநாதஐயர் என்று மட்டும் போடுவது ஏனோ என்று புரியவில்லை. இரண்டு ரூபாய் விலையில் கையடக்கமாக வெளிவந்த இந்நூலை இன்னும் விரிவான அளவில் எழுதி மீண்டும் சிறப்புற வெளியிடலாம்.

— ஆசிரியர்

# சங்கச் செய்திகள்

## மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

**மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :**

1980-81 ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசுப் பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் பிறஅன்பர்களுக்கும். எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ரொக்கப்பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

### உயர்நிலைப்பள்ளி 10 - ஆம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

| வ. எண் | மாணவர் பெயர் பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| | | | | ரூ. |
| 1. | R. M. இந்திராணி (3993), கலியாணசுந்தரம் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர். | 179 | முதல்பரிசு | 50.00 |
| 2. | மு பொ. சாந்தி (16316) நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை—9. | 179 | முதல்பரிசு | 50.00 |
| | (முதற் பரிசுத் தொகை ரூ 100 - ஐ ஒரே மதிப்பெண் பெற்ற இரு மாணவியருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.) | | | |
| 3. | A. சசிதேவி (2537). அரசு மகளிர் உயர்பள்ளி, சங்ககிரி, சேலம். | 176 | 2 ம் பரிசு | 20.00 |
| 4. | ஹ அஸ்மாதாராபேகம் (16337), நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை. | 176 | 2 ம் பரிசு | 20.00 |
| 5. | R. பாலசுப்பிரமணியன் (17624). M. L. W. A. உயர்பள்ளி, மணிநகரம், மதுரை. | 176 | 2 ம் பரிசு | 20.00 |
| | (இரண்டாம் பரிசுத் தொகை ரூ 50 உடன் ரூ 10 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற மூன்று மாணவருக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.) | | | |
| 6. | வ பத்மாராணி (17002), மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி மதுரை 10. | 175 | 3 ம் பரிசு | 25.00 |

| | | | |
|---|---|---|---|
| 7 கா மைமூன்தாஹிராமா (122), நகர்மன்ற மகளிர் உயர்பள்ளி, பேட்டை. திருநெல்வேலி-4. | 174 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 8. இல. சாந்தி (16365), நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை-9. | 174 | ” | 10.00 |
| 9. S. வசந்தா தேவி (18445), தில்லையாடி வள்ளியம்மை மாநகராட்சி பெண்கள் உயர்பள்ளி மணிநகரம், மதுரை-1. | 174 | ” | 10.00 |
| 10. G. எஸ்தர் அமிர்தகுமாரி (6769), நெய்வேலி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நெய்வேலி. | 174 | ” | 10.00 |
| 11 வெ. பிரமிளா (1608), தூய மரியன்னை உயர்பள்ளி, 484, திருச்சி சாலை, கோயம்புத்தூர். | 174 | ” | 10.00 |
| 12. முகமது முகைதீன் சேக் மோத்தி-பாஷா (16962), மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி, மதுரை. | 174 | ” | 10.00 |
| 13. A. ஜெயந்தி 891 | 174 | | 10.00 |
| 14. J. செல்வசாந்தி 901 } தஸ்நேவிஸ் மாதா பெண்கள் உயர்பள்ளி, தூத்துக்குடி. | 174 | ” | 10.00 |
| 15. செ. வாசுகி (2462), அரசுயர்பள்ளி, குமரலிங்கம் P.O. உடுமலை T.K., கோவை Dt. | 174 | ” | 10.00 |
| 16. G. சாந்தி (3573), பாய்லர் பிளாண்ட் பெண்கள் உயர்பள்ளி சைலாசபுரம். திருச்சி-14. | 174 | ” | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 17. சா. தமிழ்மாறன் (5267), அரசு மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி, புதுக்கோட்டை. | 174 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 18. எஸ். மோகனலதா (5533), டால்மியா மேல்நிலைப் பள்ளி, டால்மியாபுரம். | 174 | ,, | 10.00 |
| 19 சு. இராசலக்குமி (6125), புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திண்டிவனம், தெ. ஆ மாவட்டம் | 174 | ,, | 10.00 |

மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த்தேர்வில் ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆர் எம். மாறன் (12559), T. V. S. உயர்பள்ளி, மதுரை. | 177 | முதல்பரிசு | 100.00 |
| 2. A. S. இந்திரா (12855), சௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை-9 | 175 | 2 ம் பரிசு | 50.00 |
| 3. P. மணிமேகலை (1231). அரசினர் மகளிர் மேல்நிலை மற்றும் ஆசிரியப்பயிற்சி நிறுவனம், நாமக்கல் P. O., சேலம் Dt. | 174 | 3 ம் பரிசு | 25.00 |
| 4. R. G. கோமதி (12854), சௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம். மதுரை -9. | 172 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 5. கே. ரமணி (12545), T. V. S. உயர்பள்ளி, மதுரை-3. | 172 | ,, | 10.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | T.V. சசிநந்தினி (12876), சௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை. | 172 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 7. | N. லதா (1219), அரசினர் மகளிர் மேல்நிலை மற்றும் ஆசிரியப்பயிற்சி நிறுவனம் நாமக்கல், சேலம். | 169 | " | 10.00 |
| 8. | G. லலிதா (6524), கண்ணகி அரசினர் பெண்கள் உயர்பள்ளி, வில்லியனூர்-605110. பாண்டிச்சேரி. | 169 | " | 10.00 |
| 9 | R. லதா (12861), சௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், மதுரை-9. | 169 | " | 10.00 |
| 10. | B. வசந்தி (13109), சீதாலெட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருநகர். மதுரை-6. | 168 | " | 10.00 |
| 11. | பி ராகவன் (12582), T. V. S. உயர்பள்ளி, மதுரை-3. | 168 | " | 10.00 |
| 12. | K. கிருஷ்ணமூர்த்தி (14468), சேதுபதி உயர்பள்ளி, மதுரை-1. | 168 | " | 10.00 |
| 13. | S சாரதா (14998), கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆதிமூலம்பிள்ளை தெரு, மதுரை. | 168 | " | 10.00 |
| 14. | சு. லதா (13620), ஈ. வெ. ரா நாகம்மையார் பெண்கள் உயர்பள்ளி, தெற்கு வெளிவீதி, மதுரை. | 168 | " | 10.00 |

# தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர்! வணக்கம்!

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள், புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிகஉயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ் மொழிக்கூடம் ஒன்றை நிறுவினார். இன்றைக்கு கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இம்மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

## பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

பாண்டித்துரைச்சாமி தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிச் சிறப்புற நடத்தினர் என்பதை உணர்ந்து உவகை கொண்ட தமிழக அரசு, நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ்மாநாட்டில் அன்னாருக்கு மதுரையில் திருவுருவச்சிலை அமைத்திருக்கும் சிறப்பினை தமிழன்பர்களாகிய நாம் வரவேற்றுப் பாராட்டுகின்றோம். இதன் மூலமாகத் தமிழன்பர்களின் நீண்டநாளைய கனவு நனவாக்கப்பட்டிருக்கின்றது. அரசுக்கு நாம் அனைவரும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## தேர்வின் அமைப்பும் பயனும் :

உயர்நிலை மற்றும்மேல்நிலைப்பள்ளிகள், கல்லூரி மாணவர்கள் முறையே பொதுத் தேர்வுகளிலும் பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு கடந்த 80 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலை மற்று

மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வுகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பெரும்பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதிகளே தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வுக்கும் உரிய பாடப்பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (PUBLIC EXAMINATION) முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத்தேர்விற்கு, நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெருசு வாய்ப்பளிக்கின்றது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும்

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ்அளிக்கப் படுகிறது. ஒவ்வொருஉயர்நிலைப்பள்ளியிலும்மேல்நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன, மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப் படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்துமூன்று மாணவர்கள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள், தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' செப்டம்பர் 1981 மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :-

## உயர்நிலைப் பள்ளி
## மேல்நிலைப் பள்ளி

| வகுப்பு | தேர்வுக் கட்டணம் | தேர்வு நாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு | ரூ. 3.00 | 13-2-82 | முதல்தாள் 10—12.30<br>இரண்டாம் தாள் 2—4.30 |
| மேல்நிலைப் பள்ளி இறுதியாண்டு பொதுத் தமிழ் | ரூ. 3.50 | 20-2-82 | முதல்தாள் 10—1<br>இரண்டாம் தாள் 2—1 |
| சிறப்புத் தமிழ் | ரூ. 2.25 | 22-2-82 | 10—1 |

**கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் 18-2-82**

### தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக் கொள்ள வேண்டிய செலவுத் தொகை

15 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள்/ மொத்தத் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 15 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு செலவுப் பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அன்பளிப்பு

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை சென்ற ஆண்டு முதல் தாள் ஒன்றிற்கு, பின்வருமாறு உயர்த்தப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளி - பத்தாம் வகுப்பு | ரூ. | 0. 75 | காசு |
| மேல்நிலைப் பள்ளி - இறுதியாண்டு | ,, | 0. 90 | காசு |

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்

அன்பு வேண்டுகோள்

கடுமையான நிலையில் விலைகள் உயர்ந்துள்ள போதிலும் மாணவர்களின் நலன் கருதித் தேர்வுக் கட்டணத்தைச் சிறிதும் உயர்த்தாது தேர்வுப்பணிகள் சிறப்புடன் நடைபெற்று வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்தவும் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர்தம் பெயர்ப் படிவங்களை உங்களுக்கு அனுப்புவதற்கும் முன் கூட்டியே மாணவர் எண்ணிக்கையை அறிந்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இந்த இதழின் கடைசிப்பக்கத்தில் உங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அப்பக்கத்தினை மட்டும் எடுத்து எங்களுக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் படிவம் கிடைத்த உடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பதிவுப் பட்டியலும் (2) வரவு செலவுப் பட்டியலும் (3) விடைத்தாள்

திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியலும் (4) கால அட்டவணை தேர்வுக் கட்டணம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக்கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் தேர்வில் கலந்துகொள்ள இயலவில்லையென்றாலும் எங்கட்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தமிழ்ச்சங்கத் தேர்வில் மாணவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கும் அரசு ஆணை

குறிப்பு:- R. Dis. 166528/65 dated 22—12—65 என்ற ஆணையின் (G O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள

மதுரை 1 — T.P.M. பெரியசுவாமி

20—10—81 — செயலாளர்.

(தமிழ்ச்சங்கத்திற்கு எடுத்து அனுப்ப வேண்டிய பக்கம்)

**தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை**

அனுப்புநர்:

______________________________

______________________________

______________________________

பெறுநர்

செயலாளர் அவர்கள்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001.

ஐயா,

எங்களுடைய உயர்பள்ளி/ மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் நம்முடைய தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலும், தேர்வு பற்றிய பிற குறிப்புக்களையும் அனுப்பி வைக்கவும். விடைத் தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ________.

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| உயர்நிலைப் பள்ளி (பத்தாம் வகுப்பு) | ________ |
| மேல்நிலைப் பள்ளி 2-ஆம் ஆண்டு (பொது) | ________ |
| மேல்நிலைப் பள்ளி 2-ஆம் ஆண்டு சிறப்புத் தமிழ் | ________ |

நாள்

இங்ஙனம்

தலைமையாசிரியர்/ முதல்வர்/ தமிழ்த்துறைத் தலைவர்

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கும்
செந்தமிழ்க் கல்லூரி பழைய மாணவர்களுக்கும்
**அன்பு வேண்டுகோள்**

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதம் (புலவர்) பட்டப் பெற்றும் செந்தமிழ்க் கல்லூரி வித்துவான் (புலவர் பட்டம் பெற்றும் கல்லூரிகளிலும் மேல்நிலை, உயர்-நிலைப் பள்ளிகளும் வேறுபல துறைகளிலும் பணி-யாற்றிக் கொண்டிருக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி பழைய மாணவர்கள் உங்களுடைய இல்லத்தின் முகவரியையும் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் முகவரியையும் செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை என்ற முகவரிக்கு எழுதி அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ள

டி. பி. எம். பெரியசுவாமி

செயலாளர்

**மணியம் பிரஸ்,**
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு,
மதுரை-9.